கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர், மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஆகஸ்ட் 2010 ரூபாய் 15/-



## பக்தி என்பது கிருஷ்ணருக்கு மட்டுமே



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் என்னும் இப்பத்திரிகை, விரும்பியதை வழங்கும் கற்பக மரத்தைப் போன்றது. நம்முடைய எல்லா விருப்பங்களையும் இந்த ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பூர்த்தி செய்யும்.

நம்மைப் பொறுத்தவரையில் நாம் இதனை மிகுந்த ஆர்வத்துடனும் கவனத்துடனும் படித்தல் அவசியம். கிருஷ்ணரே இன்பத்தின் உறைவிடம் என்பதால், நாம் அன்றாடம் தேடிக் கொண்டுள்ள இன்பத்தை அடைவதற்கான ஞானம் இங்கு கிடைக்கப் பெறும்.

கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதற்கு, இப்பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்தல் மிகவும் உதவியாக அமையும். இந்த தெய்வீக ஒலியதிர்வினை ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. தேனின் வேதியியல் மூலக்கூறுகளை ஒருவர் அறியாவிட்டாலும், தேனின் சுவையினை அவரால் எவ்வாறு ருசிக்க முடியுமோ, அவ்வாறே இந்த திருநாமத்தின் சுவையினை எல்லோராலும் அனுபவிக்க முடியும்.

ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்து, ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தைப் படியுங்கள். எளிமையான இந்த வழிமுறையினால் நீங்கள் படிப்படியாக உயர்வு பெற்று பரிபூரண ஆனந்தத்தை அடைவீர்கள்.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 5

ஆகஸ்ட் 2010

4 பக்தி என்பது கிருஷ்ணரிடம் மட்டுமே
9 மக்கள்தொகைப் பெருக்கமும் உண்மையான பற்றாக்குறையும்
13 திருடன் சாதுவாக மாறுதல்
15 பண்பாட்டைக் கைவிடும் பாரத மக்கள்
18 ஸ்ரீ கிருஷ்ண பிரசாதம்
20 பிரலம்பாசுர வதம்
23 சேலம் மாநகரில் ஸ்ரீ ஜகந்நாதரின் ரதயாத்திரை
24 பக்குவமான அறிவினை பக்குவமற்ற உலகில் காணுதல்
27 நேரமில்லை, நேரமில்லை
29 ஸ்ரீமத் பாகவதம்
31 நாகர்கோவிலில் பூமி தான யாகம்
31 கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி
32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ், சதீஷ் குமார்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. தொலைபேசி: (044) 22272920

**செயல் அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், தங்களது முகவரியை எமது சந்தா அலுவலகத்திற்கு (கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு), சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. **சந்தா தொகை:** ஒரு வருடம், ரூ. 160; இரண்டு வருடம், ரூ. 300; ஐந்து வருடம், ரூ. 700.

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

## எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்




## நாங்கள் பேரதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள்

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படிப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததில் நான் என்னைப் பெரும் பாக்கியசாலியாக நினைக்கின்றேன். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய தெளிவான உண்மைகளை வழங்கக் கூடிய இதுபோன்ற பத்திரிகைகள் இங்கு (இலங்கையில்) இல்லை. தற்போது திரிகோணமலை இஸ்கான் மூலமாக கிருஷ்ணரைப் பற்றி அறிந்து வருகிறோம், புத்தகங்களையும் படித்து வருகிறோம். நாங்கள் இதுவரை இந்தியாவிற்கு வந்த தில்லை. இந்தியாவிலுள்ள கிருஷ்ணர் (அல்லது விஷ்ணு) கோவில்களைப் பற்றிய கட்டுரைகளைத் தாங்கள் அவ்வப் போது வெளியிட்டால், அதனை நாங்கள் பாக்கியமாகக் கருதுவோம். அதிலிருக்கும் படங்கள் எங்களுக்கு நிச்சயமாக திருப்தியைத் தரும். இதனைக் கருத்தில் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டு கிறோம்.

B.கயல்விழி பாலகுமார்
திரிகோணமலை, இலங்கை

## ஆன்மீக மறுமலர்ச்சி

65 ஆண்டுகால பாரம்பரியமிக்க Back to Godhead பத்திரிகையை தமிழில் வெளியிடுவதன் மூலம் நீங்கள் தமிழ் உலகிற்கு மாபெரும் தொண்டு புரிகிறீர்கள். நாத்திகமும் போலி ஆன்மீகக் குழுக்களும் போலி ஆன்மீக பத்திரிகைகளும் நிரம்பிய தமிழகத்தில், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் போவது நிச்சயம்.

R.பார்த்திபராஜ்
கணிப்பொறி வல்லுநர், பெங்களூர்

## எதை நாங்கள் சாப்பிடுவது?

தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் என்னும் கட்டுரை மிகவும் அருமை யாகவும் சிந்தனையைத் தூண்டும் விதத்திலும் இருந்தது. எமது உளமார்ந்த பாராட்டுகள். ஒரு கேள்வி: கொல்லாமை குறித்து வள்ளுவர் சொல்லும் கருத்துகளை ஏற்றுக் கொண்டால், நாங்கள் எதைத்தான் சாப்பிட முடியும்? ஒரு நெற்பயிரில் கூட உயிர் உள்ளது. அப்படிப் பார்த்தால் எதை நாம் சாப்பிட முடியும்? திருவள்ளுவர் அதற்கு விடையளிப்பதுபோலத் தோன்ற வில்லையே?

R.வரதராஜுலு
தலைமைப் பேராசிரியர்,
மின்னியல் துறை (HOD, EEE)
சுரபி பாலிடெக்னிக் கல்லூரி, நாமக்கல்

## எமது பதில்

ஓர் உயிர் ஓர் உடலினுள் வாழ்வதற்கு மற்றொரு உயிரின் உடலே உணவாகும். இதுவே இயற்கையின் நியதி. எனவே, எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வது என்பது, தாங்கள் குறிப்பிட்டிருப்பது போலவே இயலாததாகும்.

பகவத் கீதையைப் போன்ற வேத சாஸ்திரங்கள் மனிதர்கள் உட்கொள் வதற்கு உகந்த உணவு வகைகளாக தாவர உணவுகளைக் குறிப்பிடுகின்றன. எந்த உயிரை அழித்தாலும் அது கொலை செய்வதே என்றபோதிலும், கொலை செய்தல் என்று நாம் பொதுவாகச் சொல்லும்போது அது மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், போன்றவற்றைக் குறிப்பிடுவதாக இருக்குமேயொழிய தாவரங்களை அது குறிப்பிடாது. உதாரணமாக, எதிரியைக் கொன்ற மன்னன், பசுவைக் கொன்ற கொடியவன், புறாவைக் கொன்ற வேடன் என்றுதான் நாம் கூறுகின்றோம்; நெல்லைக் கொன்றவன், மாம்பழத்தைக் கொன்றவன், இலையைக் கொன்றவன் போன்ற வார்த்தைகள் ஒருகாலத்திலும் பழக்கத்தில் இருப்பது கிடையாது. இதை வைத்துப் பார்க்கும்போது, திருவள்ளுவர் கொல்லாமை என்று உரைப்பது, மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றைக் குறிப்பிடுவதாகவும் தாவரங்களையும் தானியங்களையும் குறிப்பிடவில்லை என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம். திருக்குறளில் இவை தெளிவாக விளக்கப்படவில்லை என்றாலும், பகவத் கீதையைப் போன்ற வேத இலக்கியங்கள் இவற்றை முறையாக விளக்கியுள்ளன.

சைவ உணவை உண்பவர்கள், உயிர்களைக் கொல்வதால் வரும் பாவ விளைவுகளிலிருந்து பெருமளவில் விடுபடுகின்றனர் என்றபோதிலும், அந்த உணவினை இறைவனுக்கு அர்ப்பணிக்காமல் உட்கொண்டால், அவர்கள் நிச்சயமாக பாவத்திற்கு உட்பட்டவர்களே என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. எனவே, பாவத்தை முற்றிலுமாக விலக்க விரும்புபவர்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு (விஷ்ணு விற்கு) நைவேத்யம் செய்த பிரசாதத்தை மட்டுமே உண்ண வேண்டும். (இவ்விதழில் வெளிவந்துள்ள பிரசாதம் குறித்த கட்டுரையைப் படிக்கவும்)

**கேள்விகளும் கருத்துகளும்**

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். உங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தை தொடர்புகொள்ளும் போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

# பக்தி என்பது கிருஷ்ணரிடம் மட்டுமே

## உண்மையான பக்தர்கள் எந்தவித வெகுமதியையும் எதிர்பார்ப்பதில்லை

**வழங்கியவர்:** தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்


*உண்மையான பக்தி குறித்தும் பக்தியோடு செயல்படுவது குறித்தும் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதரால் 1974ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் தேதியன்று மும்பையில் நிகழ்த்தப்பட்ட உரை.*

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம்
யஜந்த இஹ தேவதா:
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே
ஸித்திர் பவதி கர்ம-ஜா

“பலன் தரும் செயல்களில் வெற்றியை விரும்பும் இவ்வுலக மனிதர்கள் தேவர்களை வழிபடுகின்றனர். இவ்வுலகில் இத்தகு செயல்களுக்கு விரைவில் பலன்கள் கிடைப்பது உண்மையே.” (பகவத் கீதை 4.12)

### தேவர்கள்

பூரண உண்மையை ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் தேடுகின்றனர்; தேவர்களை வழிபடுவதும், ஒரு விதத்தில் பார்த்தால், பூரண உண்மையான முழுமுதற் கடவுளைத் தேடுவதுதான். எனவே, வேதங்களின் உபாஸன காண்டத்தில் தேவர்களை வழிபடுதல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வேதங்கள், கர்ம காண்டம், ஞான காண்டம், உபாஸன காண்டம் என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எனவே வேதங்களை த்ரயி (மூன்று) என்றும் அழைப்பர். தாம் ஈடுபட்டிருக்கும் தொழிலில் வெற்றியடைய மக்கள் சில சமயங்களில் தேவர்களை வழிபடுகிறார்கள். தேவர்களும் நம்மைப் போன்று உயிர்வாழிகளே; மேலும், எல்லா உயிர்வாழிகளும் கிருஷ்ணரின் அங்க உறுப்புகளே. தேவர்களுக்கும், நம்மைப் போன்ற இதர உயிர்வாழிகளுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. எனினும், சந்திரன், சூரியன், இந்திரன், பிரம்மா போன்ற பதவிகளை அடையுமளவிற்கு அவர்கள் அதிர்ஷ்டம் உடையவர்களாக உள்ளனர்.



### தேவ வழிபாடு

தேவர்களை வழிபடுவதும் என்னை வழிபடுவதே என முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் (9.23) கூறுகிறார், ஆனால் அத்தகு வழிபாடு, அவிதி பூர்வகம், முறையற்ற வழிபாடாகும். முறையான வழிபாடு என்பது முழுமுதற் கடவுளை வழிபடுவதே. தேவர்களை வழிபடுதல் என்பது, ஒரு பெரிய அதிகாரியைப் பார்க்க அங்குள்ள வாயில் காப்பாளனுக்கு அன்பளிப்பு கொடுப்பதைப் போன்றதாகும். தேவர்களை வழிபடுவதால் உடனடிப் பலன்களைப் பெற முடியும். ஆனால் அவை (அந்தவத்:) ஓர் எல்லைக்கு உட்பட்டவை; பக்தியோ எல்லையற்றது. மந்த புத்தியுடையோர் முழுமுதற் கடவுளை வழிபடுவதற்குப் பதில் தேவர்களை வழிபடுகின்றனர். முக்கியமாக, இந்தியாவில் தேவர்களை



வழிபடும் பல பக்தர்களைக் காணலாம். இவர்களை பக்தர்கள் என்று கூறவியலாது. பக்தி என்பது உண்மையில் முழுமுதற் கடவுளுடன் தொடர்புடையதாகத்தான் இருக்க முடியும். தேவர்களை வழிபடுபவர்கள் பலன் கருதி செயல்படுவதால் அவர்கள் பக்தர்களே அல்லர். ஆனால் பக்தி என்பது அப்படி அல்ல. பக்தர்கள் முழுமுதற் கடவுளிடம் எதையும் எதிர்பார்ப்பது இல்லை. இதுவே பக்திக்கும் தேவர்களை வழிபடுவதற்கும் உள்ள வேற்றுமை.

## உண்மையான பக்தி

பக்தி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சைதன்ய மஹாபிரபு பின்வருமாறு போதிக்கின்றார்:

*ந தனம் ந ஜனம் ந சுந்தரீம்*
*கவிதாம் வா ஜகத்-ஈஷ காமயே,*
*மம ஜன்மனி ஜன்மனீஷ்வரே*
*பவதாத் பக்திர் அஹைதுகி த்வயி*

“எம்பெருமானே, எனக்கு செல்வங்களோ, அழகிய பெண்களோ, என்னைப் பின்பற்றுவோரோ வேண்டுமென நான் உங்களிடம் கேட்க விரும்பவில்லை. அவையெல்லாம் லௌகீகச் செல்வங்கள். எனவே இவையேதும் எனக்கு வேண்டாம். ஒவ்வொரு பிறவியிலும் உமது காரணமற்ற கருணையே எனக்குத் தேவை.” இதுவே ஒரு பக்தனின் விருப்பம், அவன் முக்தியைக்கூட விரும்புவதில்லை, பிறவிதோறும் இறைவனின் பாத கமலங்களுக்கு சேவை செய்யவே விரும்புகிறான்.

கர்மிகள் (பலனை எதிர்பார்த்துச் செயல்படுவோர்), பொதுவாக, தேவர்களுக்கான வழிபாட்டினால் ஈர்க்கப்படுகின்றனர். ஆனால் லௌகீக இன்பத்திலிருந்து விலகியிருப்பவர்கள் கிருஷ்ணரின்பால் ஈர்க்கப்படுகின்றனர். எனவே, தற்காலிக பலன்களுக்காக தேவர்களை வழிபட வேண்டுமா அல்லது நிரந்தர பலன்களை விரும்பி கிருஷ்ணரை வழிபட வேண்டுமா என்பதை நாம் தேர்வு செய்ய வேண்டும். ஆனால் மக்கள் பொதுவாக உடனடியாகப் பலனளிக்கும் விஷயத்தையே தேர்வு செய்வார்கள். அத்தகு உடனடிப் பலன்கள் ஆரம்பத்தில் மிகவும் ருசிகரமானதாக இருக்கலாம். ஆனால் அவை முடிவில் கசப்பான விளைவுகளையே நமக்கு அளிக்கும். நாம்தான் விளைவுகளைப் பரிசீலிப்பது இல்லையே!

## உடனடிப் பலன்களும் உன்னதப் பலன்களும்

உடனடிப் பலன்கள், உன்னதப் பலன்கள் என்னும் இருவகையான பலன்கள், சமஸ்கிருதத்தில் *ப்ரேய:* என்றும் *ஷ்ரேய:* என்றும் சொல்லப்படுகின்றன. *ப்ரேய:* என்றால் உடனடிப் பலன்கள்; *ஷ்ரேய:* என்றால் உன்னதப் பலன்கள். இறுதியான அல்லது முடிவான நன்மையில் ஆர்வமுள்ளவர்கள், முழுமுதற் கடவுளை வழிபடுவதன் மூலம் அவரது திருநாட்டிற்குத் திரும்பிச் செல்கின்றனர். தற்காலிக நன்மைகளில் ஆர்வமுள்ளவர்கள் தேவர்களை வழிபடுகின்றனர். அவர்கள் துர்கா தேவியிடம், *தனம் தேஹி, ரூபம் தேஹி, யஷோ தேஹி,* “எனக்குச் செல்வம் கொடு, எனக்கு அழகைக் கொடு, எனக்கு புகழைக் கொடு” என வேண்டுவர், எந்த ஜடப் பலன்களை நாம் பெற்றோமோ அவையெல்லாம் நாம் இந்த உடலைவிட்டு வெளியேறும்போது முடிந்துவிடும். *ம்ருத்யு ஸர்வ-ஹரஷ் சாஹம்,* “முடிவில் நான் மரணத்தின் வாயிலாக உங்கள் ஜட ஆஸ்திகள் அனைத்தையும் எடுத்துக் கொள்வேன்,” என்று பகவத் கீதையில் (10.34) கிருஷ்ணர் கூறுகிறார்.

## யோகிகளாக மாறுவோம்

எனவே, தற்காலிகமான ஆதாயங்களுக்கு ஆசைப்படுவது நல்லதல்ல, நாம் நித்தியமானவர்கள் என்பதால், நாம் நித்தியமான மகிழ்ச்சியின் மீதுதான் நாட்டம் கொள்ள வேண்டும், பலன் கருதி செயல்படுபவர்களாக இருக்கக் கூடாது; மனக் கற்பனையாளர்களாகவும் (ஞானிகளாக) மாறிவிடக் கூடாது. நாம் யோகிகளாக மாற வேண்டும். எப்படிபட்ட யோகி? பக்தி யோகி.

வெவ்வேறு விதமான யோகப் பயிற்சி முறைகள் உள்ளன. அவற்றில் பக்தி யோகமே மிகவும் உயர்ந்தது. ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்: *பக்த்யா மாம் அபிஜானாதி யாவான் யஷ் சாஸ்மி தத்த்வத:* “பக்தித் தொண்டால் மட்டுமே

என்னை, முழுமுதற் கடவுளாக, உள்ளது உள்ளபடி அறிந்து கொள்ள முடியும்.'' (பகவத் கீதை 18.55) பக்தி யோகத்தில் ஈடுபடாமல், யாராலும், மகிழ்ச்சியாக இருக்க முடியாது, கிருஷ்ணரைப் புரிந்துகொள்ள முடியாது, அல்லது கிருஷ்ணருடனான உறவையும் புரிந்துகொள்ள முடியாது.

## கிருஷ்ணருக்காகச் செயல்படுதல்

மனித சமுதாயத்தின் நன்மைக்காக நாம் இத்தகு பகவத் கீதை உபன்யாசங்களைவழங்குகிறோம். இந்த கிருஷ்ண உணர்வு இயக்கமானது, நாம் இடைவிடாமல் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதற்கும், கிருஷ்ணரைப் பற்றிச் சொல்வதற்கும், கிருஷ்ண பிரசாதத்தை உண்பதற்கும், கிருஷ்ணருக்காக சேவை செய்வதற்கும், கிருஷ்ணருக்காகத் தூங்குவதற்கும், கிருஷ்ணருக்காக நடப்பதற்கும் நமக்கு வாய்ப்பளிக்கின்றது. கிருஷ்ணரை சம்பந்தப்படுத்தி எந்தச் செயல்களைச் செய்தாலும் அவை புண்ணிய செயல்களே. ஸ்ரீல ரூப கோஸ்வாமி பின்வருமாறு உபதேசம் செய்கிறார்: நிர்பந்த: க்ருஷ்ண ஸம்பந்தே யுக்தம் வைராக்யம் உச்யதே, ''எல்லாச் செயல்களையும் கிருஷ்ணருக்காக கிருஷ்ண உணர்வுடன் தொடர்புபடுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நமது வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.''



## கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டல்

கிருஷ்ணர் உங்களுடைய இதயத்தினுள் வீற்றிருக்கிறார், கிருஷ்ணரின் மீது நீங்கள் தீவிரமாக இருக்கின்றீர்கள் என்பதை அவர் பார்க்கும் போது அவர் உங்களுக்கு உதவுகின்றார். நம்முடைய இதயத்தில் நாம் பல களங்கங்களை வைத்திருக்கிறோம். இருப்பினும் நாம் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்க ஆரம்பித்த மாத்திரத்திலேயே அக்களங்கங்கள் நீக்கப்படுகின்றன. நாம் இப்போது பகவத் கீதையிலிருந்து கிருஷ்ணரைப் பற்றிக் கேட்கிறோம். கிருஷ்ணர் தம்மைப் பற்றியும், இந்த ஜடவுலகத்தின் நிலையைப் பற்றியும், ஆன்மீக உலகத்தைப் பற்றியும் கூறுகிறார். பகவத் கீதையில் எல்லா விஷயங்களும் உள்ளன. எனவே, நீங்கள் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தால், அதுவே உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு ஆரம்பமாக அமையும்.

வேதங்கள் ஸ்ருதி (கேள்வி ஞானம்) என்று அழைக்கப்படுகின்றன. சரியான நபரிடமிருந்து ஒருவர் வேதங்களைக் கேட்டு அறிய வேண்டும். அதுவே சைதன்ய மஹாபிரபுவின் பரிந்துரையாகும். ஸ்தானே ஸ்திதா: ஷ்ருதி-கதாம் தனு-வாங் மனோபி:. (ஸ்ரீமத் பாகவதம் 10.14.3) நீங்கள் இருக்கும் நிலையிலேயே இருங்கள்—நீங்கள் ஒரு கிருஹஸ்தனாகவோ பிராமணனாகவோ சந்நியாசியாகவோ வியாபாரியாகவோ உத்தியோகஸ்தராகவோ இருக்கலாம்; அதனால் ஒன்றுமில்லை. கிருஷ்ணரைப் பற்றிக் கேட்க முயலுங்கள், உங்களுடைய மனம், வார்த்தை, மற்றும் உடலை கிருஷ்ணரது சேவையில் ஈடுபடுத்த முயலுங்கள்.

யே ப்ராயஷோ (அ)ஜித ஜிதோப்யஸி, கிருஷ்ணருடைய ஒரு பெயர் அஜித, அதாவது, வெற்றி கொள்ளப்பட முடியாதவர். ஆனால், யாரேனும் ஒருவன், எவ்வித மனக் கற்பனையுமின்றி, பணிவுடனும் அமைதியுடனும் ஒரு தன்னையுணர்ந்த ஆத்மாவிடமிருந்து கிருஷ்ணரைப் பற்றிய விஷயங்களைக் கேட்டால், அவனால் என்றேனும் ஒரு நாள் அந்த வெற்றிகொள்ளப்பட முடியாதவரையும் வெற்றிகொள்ள முடியும்.

கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதற்கான வாய்ப்பை அனைவருக்கும் வழங்குவதற்காகவே அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் செயல்படுகிறது. அவ்வாறு செவியுறுவதே ஆரம்ப முறை, ஸ்ரவணம். ஒருவர் கிருஷ்ணரைப் பற்றி நன்கு கேட்டறிந்தால், பிறகு அவரால் கிருஷ்ணரைப் பற்றிப் பேச முடியும். அவர் நிச்சயம் பேச வேண்டும். அவரால் பேசாமல் இருக்க முடியாது. அதுவே கேட்பதின் பலன். நன்றாகக் கேட்பதன் மூலம் நன்றாகப் பேச முடியும். யாரைப் பற்றிக் கேட்க, பேச வேண்டும்? விஷ்ணு அல்லது கிருஷ்ணரைப் பற்றியே.

## ஒன்பது வித பக்தி

ஷ்ரவணம் கீர்தனம் விஷ்ணோ:
ஸ்மரணம் பாத-ஸேவனம்
அர்சனம் வந்தனம் தாஸ்யம்
ஸக்யம் ஆத்ம-நிவேதனம்

''விஷ்ணுவைப் பற்றிச் செவியுறுதல், விஷ்ணுவைப் பற்றிப் பேசுதல், விஷ்ணுவைப் பற்றி நினைத்தல், அவரது தாமரை பாதங்களுக்கு சேவை செய்தல், அவரை பூஜித்தல், அவரைப் போற்றிப் புகழ்தல், அவருடைய சேவகனாக மாறுதல், அவருடைய நண்பனாக

**கிருஷ்ணரைப் பற்றி கேட்பதற்கான வாய்ப்பை அனைவருக்கும் வழங்குவதற்காகவே அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் செயல்படுகிறது.**

மாறுதல், எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணித்தல் ஆகிய ஒன்பதும் தூய பக்தித் தொண்டின் வழிமுறைகளாகும்." (ஸ்ரீமத் பாகவதம் 7.5.23)

உலகம் முழுவதும் உள்ள கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பக்தர்கள், இந்த ஒன்பது விதமான கிருஷ்ண உணர்வு முறைகளை பிரச்சாரம் செய்கின்றனர். இந்தியாவின் முக்கிய நகரமான மும்பையில் நாங்கள் நிறுவியுள்ள இந்த மையத்திற்கு நீங்கள் எல்லோரும் தினமும் வந்து, பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், வேதாந்த சூத்திரங்கள், இராமாயணம், மஹாபாரதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த கிருஷ்ண உணர்வு தத்துவத்தைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இவையெல்லாம் அதிகாரப்பூர்வமான வேத இலக்கியங்கள். நாங்கள் எதையும் திரித்துக் கூறுவதில்லை, எதற்கும் புதிய அர்த்தம் கற்பிப்பதும் இல்லை, பகவத் கீதையை அதன் உண்மையான உருவில் தருகின்றோம்.

இவ்வாறு நாம் புரிந்துகொள்ளும் போது, காலப்போக்கில் சிறிதுசிறிதாக நமது கடந்த கால பாவச் செயல்களின் விளைவுகளிலிருந்து நம்மால் விடுபட முடியும். கிருஷ்ண கீர்த்தனத்தில் பகவானைப் பற்றி பாடுவதினால், இதயத்தில் சேர்ந்துள்ள அமங்களமான விஷயங்களிலிருந்து நாம் தூய்மையடைகிறோம். சேதோ தர்பன மார்ஜனம், இந்த இதயமானது கண்ணாடியைப் போன்றது. ஹரே கிருஷ்ண என்று பாடுவதன் மூலம் அதனை நாம் தூய்மைப்படுத்த முடியும் என்று சைதன்ய மஹாபிரபு கூறியுள்ளார். இதயம் தூய்மையடைந்த பிறகு, கிருஷ்ணர் யார் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியும். நான் யார்? கிருஷ்ணருடனான எனது உறவு என்ன? கிருஷ்ணருடைய உறவில் நான் எவ்வாறு செயல்படுவது? ஆகியவற்றைப் புரிந்துகொள்வதே வாழ்வின் பூரணத்துவமாகும். மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)




# மக்கள்தொகைப் பெருக்கமும் உண்மையான பற்றாக்குறையும்

**வழங்கியவர்: ஜெயாத்வைத ஸ்வாமி**

சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், சமூகவியல் வல்லுநர்கள், என எண்ணற்றோர் மக்கள்தொகைப் பெருக்கத்தைப் பற்றி பெரும் கவலை கொள்கின்றனர். மக்கள்தொகை மிகவும் அதிகரித்து, அஃது எல்லா எல்லைகளையும் தாண்டிச் செல்லும்போது, சமுதாயத்தின் குறைந்தபட்சத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்வதற்கான இயற்கை வளங்கள் இல்லாமல் போய்விடும் என்னும் அவர்களது கொள்கையே அக்கவலைக்குக் காரணம். உலகத்திலுள்ள சில நாடுகள் இப்பிரச்சனையை ஏற்கனவே சந்தித்து விட்டதுபோலத் தோன்றுகின்றது; வளமுள்ள நாடுகள் இப்பிரச்சனையை இன்னும் அனுபவிக்காவிட்டாலும், அவர்களும் இதைப் பற்றி மிகவும் கவலை கொண்டுள்ளனர்.

## இயற்கையின் சட்டங்கள்

சமூகவியலையும் சுற்றுச்சூழலையும் ஆராய்ச்சி செய்பவர்கள், மக்கள்தொகைப் பெருக்கம், இயற்கை வளம் குறைதல் போன்ற பிரச்சனைகளை அவற்றின் அளவை அடிப்படையாகக் கொண்டு அணுகுகின்றனர். வேத ஆய்வாளர்களோ அளவைக் காட்டிலும் தரத்தினை வலியுறுத்துகின்றனர். மக்கள் தொகையின் அளவைக் காட்டிலும், அம்மக்களின் தரமே மிகவும் அவசியம் என்று அவர்கள் கூறுகின்றனர்.



அதிகரிக்கும் மக்கள்தொகைக்கு ஈடுகட்டும் வகையில் போதுமான இயற்கை வளங்களை பூமியினால் வழங்க இயலவில்லை என்னும் கருத்து ஏற்கப்பட முடியாததாகும். இயற்கைச் சட்டங்களின் அடிப்படையில் எல்லா ஜீவராசிகளுக்கும் தேவையான உணவும் உறைவிடமும் அளிக்கப்பட்டுள்ளன. ஓர் எறும்பின் தினசரி உணவு சில தானியங்கள் மட்டுமே; ஆனால் ஒரு யானையானது தன்னைப் பராமரித்துக் கொள்ள நூற்றுக்கணக்கான பவுண்டுகள் உண்ண வேண்டியிருக்கும். இவர்களுக்கு உணவளிப்பது யார்? இவர்களைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் அரசு நிறுவனம் எதுவும் தேவைப் படுவதில்லை; ஏனெனில், அவற்றின் தேவைகள் அனைத்தும் இயற்கையின் விந்தையான, சிக்கலான, திறமையான சட்டங்களின் மூலம் தாமாகவே நிவர்த்தி செய்யப்படுகின்றன.

## பொருளாதாரக் கொள்கைகள்

அதுபோலவே மனிதனுக்குத் தேவையான உணவும் இயற்கையிடம் ஏற்கனவே உள்ளது. மக்கள் சில நாடுகளில் பட்டினியால் வாடினால், இயற்கை அவர்களுக்கு வழங்கவில்லை என்பது பொருள் அல்ல; மாறாக, உலகத் தலைவர்களின் தவறான திட்டங்களே அதற்குக் காரணம். ஒரு குறிப்பிட்ட விதமான பொருளாதாரத்தைப் பராமரிப்பதற்காக ஐக்கிய அமெரிக்க

நாடுகளின் அரசாங்கம், தினமும் டன் கணக்கில் உணவு தானியங்களை வீணாக அழித்து வருகிறது; மறுபுறம் பட்டினியால் வாடும் மற்ற நாட்டின் மக்களுக்கு இந்த தானியங்கள் அத்தியா வசியமாகத் தேவைப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவின் அரசாங்க அலுவலர்கள், தானியங்களைக் கடலில் வீசவில்லை என்றால், அமெரிக்கர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றும், அதன் பின்விளைவாக அமெரிக்கர்கள் பட்டினியைச் சந்திக்க நேரிடும் என்றும் வாதாடுகின்றனர். அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான சிக்கல், மிருகங்களின் சமூகத்தில் இல்லை; எந்தவொரு அரசாங்கத்தின் குறுக்கீடும் இல்லாமல் இயற்கை தானாகவே அவர்களைப் பராமரித்து வருகின்றது.

இயற்கையின் சட்டங்களைப் பற்றிய போதிய அறிவு இல்லாதிருப்பதே பிரச்சனையாகும். இயற்கையின் சட்டங் களைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப வாழ்க்கையை நடத்தினால், ஒருவர் எளிமையாக வாழ விரும்பினாலும் சரி, வசதியாக வாழ விரும்பினாலும் சரி, அவர் அமைதியாக எந்த இன்னலும் இன்றி வாழ முடியும். ஆனால் இயற்கையின் சட்டங்களை சுயநலனிற்காகப் பயன்படுத் தினால், அல்லது இச்சட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றிய சரியான அறிவின்றி அவர் செயல்பட்டால், அதன் முடிவு, இயற்கையின் சிக்கல்களில் அவர் இன்னும் அதிகமாக பந்தப்படுகிறார்; தனக்காகவும் தனது சமுதாயத்திற்காகவும் துன்பப்படுதல் என்பது அவரால் தவிர்க்க முடியாததாகிவிடும்.

## இயற்கைக்குப் பின்னால்

இயற்கைக்குப் பின்னால் ஒரு சக்தி இருக்கிறது என்பதும், அந்த சக்தியினால்தான் இயற்கை கட்டுப் படுத்தப்படுகின்றாள் என்பதுமே இயற்கை யைப் புரிந்துகொள்வதற்கான முதல் கொள்கையாகும். பிரபஞ்ச செயல் பாடுகளின் சிக்கலான நியதிகளை விளக்குவதற்காகப் பற்பல பரிணாமக் கொள்கைகளை இகவுலக விஞ்ஞானிகள் முன்வைக்கின்றனர். இருப்பினும் இக்கொள்கைகள் அவ்வப்போது மாறிக் கொண்டே இருப்பதால், அவை நம்பக் கூடியவை அல்ல. கடவுள் எனப்படும் உன்னத புத்திசாலியினால் இயற்கை கட்டுப்படுத்தப்படுகின்றது என்னும் தெளி வான முடிவினை மறைப்பதற்காகக் கூறப்படும் அற்புதமான கற்பனைகளே இந்த விஞ்ஞானிகளின் கொள்கைகள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவான உண்மையாகும்.

ஓர் எல்லைக்குட்பட்ட மூளையின் சக்தியை நம்பியிருக்கும் ஜட விஞ்ஞானத்தின் முடிவுகள் குழப்பத்திலும் சிக்கலிலும்தான் நிறைவு பெறுகின்றன; ஏனெனில், ஒரு கற்பனையாளர் மற்றொரு கற்பனையாளரோடு ஒருபோதும் ஒத்துப் போவதில்லை. இருப்பினும், புத்திசாலி நபரால் கட்டுப்படுத்தப்படுவதால் இயற்கை புத்திசாலித்தனமான விதி களை வெளிக்காட்டுகின்றது என்னும் தெளிவான எளிய விளக்கத்தை ஒருவர் ஏற்றுக்கொண்டால், இயற்கையின் சட்டங் களைப் புரிந்துகொள்வது சுலபமாக இருக்கும். எல்லாமே கடவுளால் படைக்கப்பட்டது என்பதால், எல்லாமே கடவுளுக்குச் சொந்தமானவை; எனவே, எல்லாவற்றையும் அவரது சட்டங்களின் படியே நாம் பயன்படுத்த வேண்டும்.

## இறைவனின் சொத்துக்கள்

இக்கொள்கையினை இயற்கையின் அடிப்படை உண்மையாக வேத இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. நித்தியமான எல்லா உயிர்வாழிகளின் மத்தியில் இருக்கும் ஓர் உன்னத உயிர்வாழி, மற்ற அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்கிறார். இதை ஒவ்வொருவரும் தங்களின் தினசரி வாழ்வில் கண்கூடாகக் காண முடியும். சூரியன், தண்ணீர், காற்று முதலியவற்றின் கருணையால் நாம் வாழ்கிறோம்; இவற்றில் எதையுமே அரசு நிறுவனங்களோ, விஞ்ஞான ஆராய்ச்சிக் குழுவினரோ நமக்கு விநியோகம் செய்வ தில்லை. இவையனைத்தும் முழுமுதற் கடவுளால் வழங்கப்படுகின்றன; இதனால், இவை அனைத்துமே அந்த இறைவனின் சொத்துக்கள், அவற்றை நாம் அவரது கட்டளைகளின்படியே பயன்படுத்த வேண்டும்.

கிருஷ்ண பக்தர்கள் கடவுள் இருப்பதை முற்றிலுமாக ஏற்கின்றனர். அது நிரூபிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள், தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின்





# மக்கள்தொகைப் பெருக்கத்தில் இருக்கும் அடிப்படைப் பிரச்சனை, அளவுக்கதிகமான மக்கள் அல்ல; மாறாக, சட்டத்தை மீறுவோர் அளவுக்கதிகமாக இருப்பதே.

புத்தகங்களில் காணக்கிடைக்கும் விரிவான விளக்கங்களை அணுகலாம். அவை நியாயமானவையாகவும், நம்பிக்கை அளிக்கக்கூடியவையாகவும் உள்ளன. இச்சிறிய கட்டுரையில் அவ்விளக்கங்களை வழங்க இயலாது. சமுதாயப் பிரச்சனை குறித்த வேத வழிமுறைகளைப் புரிந்து கொள்ளும் நமது தற்போதைய முயற்சிக்கு, கடவுள் இருக்கிறார் என்ற தெளிவான உண்மையினை குறைந்தபட்சம் ஏட்டளவிலாவது ஒப்புக் கொள்வது நன்று.

## சட்ட விரோத மக்கள்

கடவுள் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், நாம் நம்மை ஓர் அழகான பொதுப் பூங்காவிலுள்ள குடிமக்களைப் போல எடுத்துக் கொள்வோம். குடிமக்கள் பொதுப் பூங்காவின் அழகைக் கண்டு ரசிக்கலாம், அனுபவிக்கலாம்; ஆனால் யாராவது ஒருவன், அப்பூங்காவின் சட்டங்களை மீறினால், பூங்காவினுள் நுழைவதற்கான அவனுடைய உரிமை ரத்து செய்யப்படுகிறது; மேலும், அரசாங்கத்தின் சட்டங்களால் அவன் தண்டிக்கப்படுகிறான்; சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்தால் அது துரதிர்ஷ்டத்தில்தான் முடியும்.

அதுபோலவே, மனிதர்களான நம் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு. நாம் விரும்புவதைச் செய்வதற்கான சுதந்திரம் நம்மிடம் உள்ளது. ஆனால் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள், சட்டத்தை மீறுபவர்கள் என இரண்டு வகையான குடிமக்கள் உள்ளனர். சட்டத்தை மீறுபவர்கள் கடவுளின் அதிகாரத்தை ஏற்க மறுப்பவர்களைப் போன்றவர்கள். கடவுளின் அதிகாரத்தை ஏற்பவர்களின் கடமைகள் தெளிவானவை—உயர்ந்த சிந்தனையுடன் எளிய வாழ்க்கை வாழ்தல்; வாழ்வை ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் நடத்துவதற்குத் தேவையானவற்றை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல்; மற்றும் மீதமுள்ள பெரும்பகுதி நேரத்தை இறையுணர்வினை வளர்ப்பதில் செலவிடுதல். இயற்கைச் சட்டங்களின் முக்கிய நோக்கம் இதுவே. இவ்வாறு எளிமையாக சிக்கலற்ற முறையில் வாழ்ந்து இறையுணர்வை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு எல்லா மனிதர்களுக்கும் இயற்கையின் ஏற்பாட்டின்படி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இறையுணர்விற்கு எதிரானவர்கள், இயற்கையின் சட்டத்தில் பிரச்சனையை உருவாக்கி, அதன் மூலம் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தை உண்டாக்குகிறார்கள்.

மக்கள்தொகைப் பெருக்கத்தில் இருக்கும் அடிப்படைப் பிரச்சனை, அளவுக்கதிகமான மக்கள் அல்ல; மாறாக, சட்டத்தை மீறுவோர் அளவுக்கதிகமாக இருப்பதே. முன்னரே உரைத்தபடி, தனது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள எல்லா ஜீவராசிகளையும் பராமரிப்பதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் இயற்கையினால் வழங்க இயலும். அதே சமயத்தில் அந்த வளங்களைக் கொடுக்க மறுக்கும் சக்தியும் இயற்கையிடம் உள்ளது. அவளது கடுமையான சட்டங்களை உடைத்து அவளிடமிருந்து தேவைக்கு அதிகமாக எடுத்துக்கொள்ள மக்கள் முயற்சிக்கும்போது அவள் தனது சக்திகளை மறைத்துக் கொள்கிறாள்,

இயற்கையின் நோக்கத்தையும், அதன் சட்டங்களையும் நாம் புரிந்து கொண்டால், அமைதியும் முன்னேற்றமும் கொண்ட உலகத்தில் இயற்கையோடு இணைந்து சுலபமான முறையில் நம்மால் வாழ இயலும். ஆனால் இயற்கையின் சட்டங்களையும் நோக்கத்தையும் அறிந்துகொள்ளாத மூடர்களாக நாம் இருந்தால், வெறும் குழப்பங்களைத்தான் நாம் உண்டாக்குவோம். நவீன நாகரிகம் உலகம் முழுவதிலும் குழப்பங்களை உண்டாக்கியிருப்பதற்கு, இயற்கையின் சட்டங்கள் அல்லது கடவுளின் சட்டங்களைப் பற்றிய அறியாமையே காரணம். அச்சட்டங்கள் மிகவும் எளிமையானவை என்றாலும், முறையான ஆன்மீக மூலத்திடமிருந்து நியாயமான விதத்தில் விவேகத்துடன் புரிந்துகொள்ளப்பட வேண்டியவை. கடவுள் உன்னதமானவர், நாம் அனைவரும் அவரின் தொண்டர்கள், இயற்கை வளங்கள் அனைத்தும் அவருக்குச் சொந்தமானவை—இக்கருத்துகள் எல்லா மதப்பிரிவினராலும் ஒப்புக்கொள்ளப்படுபவை. மிகவும் எளிமையான இக்கருத்துகள் மிகவும் தெளிவானவையுமாகும்.

## நாகரிக முன்னேற்றம்

பெயரளவிலான நாகரிக முன்னேற்றத்தைப் பற்றி நாம் எல்லோரும் தம்பட்டம் அடித்துக் கொள்கிறோம். ஆனால் உலக மக்களின் மனதில் உண்மையான அமைதி இல்லையெனில், சமுதாயம் முன்னேற்றமடைவதாக யாராலும் கூற முடியாது. இறையுணர்வு இல்லாமல், அமைதி நிலவ முடியாது; நாடுகளுக்கு இடையிலும் சரி, மனிதர்களுக்கு இடையிலும் சரி, யார் பெரியவன் என்பதை வெளிக்காட்டுவதற்காக நடைபெறும் போட்டிகள் நிறைந்த இவ்வுலகில், அமைதிக்குப் பதிலாக வாழ்விற்கான கடுமையான போராட்டமே மிஞ்சும். எனவே, இறையுணர்வின் கொள்கைகளால் நிலைநிறுத்தப்படாத

எந்தவொரு நாகரிகமும் நாகரிகமே அல்ல.

இங்கு பிரச்சனை என்னவெனில், இவ்வுலகத்தின் தலைவர்களாகட்டும், அத்தலைவர்களைப் பின்பற்றும் தொண்டர்களாகட்டும், அவர்கள் யாருமே இறையுணர்வின் விஞ்ஞானத்தில் கல்வி கற்கவில்லை. அதனால் நாடுகளை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்குரிய நடை முறை விளக்கங்களை அவர்களால் வழங்க முடிவதில்லை. எனவே, இறை யுணர்வு பற்றிய விஞ்ஞானத்தில் பொது மக்களைப் பயிற்றுவிக்க உலகளாவிய திட்டங்கள் நிச்சயம் தேவைப்படுகின்றன. ஞானமளிக்கும் இம்முயற்சியை சமுதாயத்தின் புத்திசாலி வர்க்கத்தினர் முன்நின்று நடத்த வேண்டும். அத்தகு புத்தியுடைய பொறுப்புள்ள மனிதர்களின் கடமை, ஆன்மீக ஞானத்தை மையமாக வைத்து உலகப் பிரச்சனைகள் குறித்து மிகவும் தீவிரமான முறையில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும். ஏனெனில், இவ்வுலகிலுள்ள அனைவருமே உண்மையில் ஆன்மீக ஆத்மாக்களே.

## சொத்துக்களின் உரிமையாளர்

முழுமுதற் கடவுளுக்குச் சொந்த மான சொத்துக்களையும் வளங் களையும் தங்களுக்கே சொந்தம் என்று எண்ணிக் கொண்டுள்ள உலகத் தலைவர்கள் அறியாமையில் உள்ளனர். உதாரணமாக, சில நாள்கள் தங்குவதற்காக என்னை என் நண்பன் அவனது வீட்டிற்கு அழைத்திருக்கலாம்; ஆனால் அந்த வீடு என்னுடையது என்று நான் நினைத்தால், அதுவே அறியாமை, மாயை என்று அழைக்கப்படுகிறது. அவ்வாறு உரிமை கொண்டாடுவதன் விளைவாக, நான் மன சஞ்சலத்துடன் இருக்க வேண்டிவரும். அதே போல் உலகின் இயற்கை வளங்களை தன்னுடையது என்று நினைத்து அதனை உபயோகிப்பவன் அறியாமையில் உள்ளான்; அத்தகு மாயை இவ்வுலகம் முழுவதிலும் மேலோங்கியிருப்பதால், நாம் உலகளாவிய மாயையுடன் வாழ்ந்து வருகிறோம்; இவற்றின் விளைவே உலகளாவிய பதட்டங்கள்.

மற்ற மதப் பிரிவினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இறையுணர்வின் பொதுவான தளத்தினை எந்தவொரு மதத்தைச் சார்ந்தவர்களும் வழங்க இயலாது என்பதால், இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் எந்தவொரு மதப் பிரிவினர்களும் சிறப்பாகச் செயல்பட முடிவதில்லை. இருப்பினும், பல்வேறு மத நம்பிக்கையைச் சார்ந்த உலக மக்கள் அனைவராலும் எளிதில் புரிந்து கொண்டு பின்பற்றத் தகுந்ததும், முற்றிலும் மதச்சார்பற்ற ஆன்மீக விஞ்ஞானமுமான கிருஷ்ண உணர்வு, இவ்விஷயத்தில் ஒரு தன்னிகரற்ற திட்டத்தினை வழங்குகின்றது.

## இறையுணர்வை பிரச்சாரம் செய்தல்

கிருஷ்ண உணர்வின் அடிப்படைக் கொள்கை, உலக நாகரிகத்தின் மாபெரும் தேவைக்காக முழுமுதற் கடவுளின் புகழினைப் பிரச்சாரம் செய்வதாகும். முழுமுதற் கடவுள் இந்த ஜடவுலகத்தின் குழப்பத்திற்கும் பிரச்சனைகளுக்கும் அப்பாற்பட்டு திவ்யமானவராக இருப்பதால், அவரைப் புகழ்ந்து பாடுவதும் அதே போன்று திவ்யமானதாகும். முழுமுதற் கடவுள் எல்லோரின் இதயத்திலும் வீற்றிருப்பதாலும், எல்லா உயிர்வாழிகளும் உண்மையில் அவரின் அம்சங்கள் என்பதாலும், அவரைப் பற்றிய திவ்யமான புகழாரங்களை ஒருவர் செவி கொடுத்துக் கேட்கும்போது, உள்ளிருந்து செயல்படும் இறைவன் அந்த உயிர்வாழியின் உணர்வுகளைத் தூய்மை செய்கிறார்.

## ஊடகங்கள் இறைவனின் புகழைப் பாட வேண்டும்

இந்த ஜடவுலகத்தின் சம்பவங்கள் தற்காலிகமானவை, குறுகிய காலமே நீடிக்கக்கூடியவை; ஆயினும், அத்தகு சம்பவங்களைப் புகழ்வதில், உலகிலுள்ள ஊடகங்கள் (மீடியாக்கள்) அனைத்தும் முற்றிலுமாக ஈடுபட்டுள்ளன. ஆனால் அத்தகு செய்திகள் உலக மாந்தர்களுக்கு உண்மையான நன்மையை அளிக்க முடியாது. வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி முதலிய அனைத்து ஊடகங்களும், இறைவனின் சக்தியினால் செயல்படுவதால், உண்மையில் அவையனைத்தும் இறைவனின் சொத் தாகும். எந்த ஆகாயத்தின் மூலம் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் அலைகள் கடத்தப்படுகின்றனவோ, எந்த மரத்தினைக் கொண்டு செய்தித் தாள்களுக்கான காகிதங்கள் தயாரிக்கப் படுகின்றனவோ, அந்த ஆகாயமும் மரங்களும் மனிதர்களால் படைக்கப் பட்டவை அல்ல, இறைவனால் உண்டாக்கப்பட்டவையே. எனவே, எந்தவொரு மனிதரோ அமைப்போ நாடோ எந்தவொரு ஊடகத்திற்கும் உரிமை கொண்டாட முடியாது, அவ்வாறு உரிமை கொண்டாடுதல் மாயையாகக் கருதப்பட வேண்டும். இந்த ஊடகங்கள் கடவுளின் மூலாதாரங்களைச் சார்ந்திருப்பதால், அவை பகவானின் புகழினைப் பாடுவதற்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

பத்திரிகைச் செய்திகள் இறைவனின் புகழைப் பிரசுரிக்க வேண்டும்,

**எந்த ஆகாயத்தின் மூலம் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் அலைகள் கடத்தப்படுகின்றனவோ, எந்த மரத்தினைக் கொண்டு செய்தித்தாள்களுக்கான காகிதங்கள் தயாரிக்கப்படுகின்றனவோ, அந்த ஆகாயமும் மரங்களும் மனிதர்களால் படைக்கப்பட்டவை அல்ல, இறைவனால் உண்டாக்கப்பட்டவையே.**

வானொலிகள் இறைவனின் திருநாமத்தை ஒலிபரப்ப வேண்டும்; தொலைக்காட்சிகள் இறைவனின் லீலைகளை ஒளிபரப்ப வேண்டும். ஆனால் இவ்வுலகின் ஊடகங்கள் இறைவனுக்குத் தொண்டு செய்வதற்குப் பதிலாக இறையுணர்விற்கு எதிராகச் செயல்படுகின்றன. பிறப்பு, இறப்பு, நோய், மற்றும் முதுமையின் நிகழ்ச்சிகளை தினசரி தொடர்ந்து வழங்கும் செய்தித்தாள்கள், கோடிக்கணக்கில் விநியோகிக்கப்படுகின்றன; ஆனால் அடுத்த நாளே அவை குப்பைத் தொட்டியில் வீசப்பட்டு புதிய செய்தித்தாள்கள் வாங்கப்படுகின்றன, இருப்பினும் அதிலும் புதிய விஷயம் ஒன்றும் இருப்பதில்லை, ஒரே மாதிரியான செய்திகளே மீண்டும் மீண்டும் வெளிவருகின்றன. அது போலவே மனித நாகரிகத்தின் ஆன்மீக நன்மைக்கு எவ்விதத்திலும் உதவாத பௌதிக ஒலியதிர்வுகளைக் கொண்டு வானொலியும் தொலைக்காட்சியும் இந்த உலகத்தினை மாசடையச் செய்கின்றன. பத்திரிகையாசிரியர்களும் தொலைக்காட்சி வர்ணனையாளர்களும் உறங்கிக் கொண்டுள்ளனர்; உறங்கிக் கொண்டிருப்பவர் எதைப் பற்றி விவரிக்க முடியும்?



**மேலும் கீழும்:** பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ள கிருஷ்ண பக்தர்கள்

## அனைவரையும் அழைக்கின்றோம்

எல்லா உயிர்வாழிகளின் நன்மைக் காக இறைவனின் நாமம், ரூபம், குணம், மற்றும் லீலைகளை, விழித்துக் கொண்டு பறைசாற்றுமாறு ஊடகங் களின் தலைவர்களை நாங்கள் அழைக்கின்றோம். இவ்வுலகம் இயங்குவதற்குப் பிரதானமானதாக விளங்கும் ஆன்மீக ஆத்மாவைப் பற்றிய விஞ்ஞானத்தைக் கற்றுக்கொள்ளுமாறு உலகின் விஞ்ஞானிகளை நாங்கள் அழைக்கின்றோம். புலனின்பத்திற்காக அல்லாமல், ஆன்மீக ஞானத்தின் முன்னேற்றத்திற்காக அரசியல் அமைப்புகளை தங்களின் பகுதிகளில் ஏற்பாடு செய்யுமாறு அரசியல்வாதிகளை நாங்கள் அழைக்கின்றோம். எவ்வாறு எல்லோரும் இறையன்பை வளர்த்துக் கொள்வது என்பதற்கான பூரணமான நடைமுறை விஞ்ஞானத்தை வழங்கு வதும், ஆன்மீக விஞ்ஞானத்தின் உயர்கல்வியும், எல்லா மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் பொருத்த மானதுமான கிருஷ்ண உணர்வின் விஞ்ஞானத்தை கற்றுக் கொள்ளுமாறு மத வல்லுநர்களை நாங்கள் அழைக்கின்றோம். எழுத்தாளர்களை இறைவனைப் பற்றி எழுதுவதற்கும், பாடகர்களை இறைவனைப் பற்றிப் பாடுவதற்கும், உழைப்பாளிகளை இறை வனுக்காக உழைப்பதற்கும் நாங்கள் அழைக்கின்றோம். கிருஷ்ணரைப் பற்றி அவரது பக்தர்களிடமிருந்து கேட்டல் என்னும் நடைமுறைப் பயிற்சியின் மூலமாக உறங்கிக் கொண்டிருக்கும் கிருஷ்ண உணர்வைத் தட்டி எழுப்புமாறு ஒவ்வொருவரையும் நாங்கள் அழைக் கின்றோம்.

## ஒரே பற்றாக்குறை

இலட்சக்கணக்கான கோடிக்கணக் கான பிரபஞ்சங்களையும் பஞ்சமின்றி வைத்துக் கொள்வதற்கான சக்தி இறைவனிடம் உள்ளது. எனவே, உண்மையான பற்றாக்குறை என்பது நேர்மையான இறையுணர்வு மட்டுமே. இப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே இந்த அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பிரதான நோக்கமாகும்; அப்பற்றாக்குறை நீக்கப்படும்போது, மற்றெல்லாப் பிரச்சனைகளும் தானா கவே சரியாகிவிடும்.

தவத்திரு. ஜெயாத்வைத ஸ்வாமி அவர்கள், அமெரிக்காவில் பிறந்து ஸ்ரீல பிரபுபாதரால் தீட்சையளிக்கப் பட்ட மிகச்சிறந்த எழுத்தாளராவார். Back to Godhead ஆங்கிலப் பதிப்பின் தொகுப்பாசிரியராக பல வருடங்கள் தொண்டு புரிந்த அவர், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் டிரஸ்டிகளில் ஒருவராவார்.

**(தமிழாக்கம்:** ஜெயகோவிந்தராம தாஸ்)






திருடன் சாதுவாக மாறுதல்
ஒருமுறை, மன்னர் ஒருவர் தனது நாட்டிலிருந்த சாதுக்களை ஒரு சந்திப்பிற்காக அழைத்தார்.
எனது நாட்டிலுள்ள சாதுக்கள் அனை வரையும் நான் காண விரும்புகிறேன். ஏற்பாடு செய்யுங்கள்.
அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஒரு திருடனும் வந்தான்.
மன்னர் சாதுக்களுக்கு ஏதேனும் பரிசுகளை வழங்குவார், அவர்களிடமிருந்து அவற்றை எளிமை யாகத் திருடி விடலாம்.
மாபெரும் சாதுக்களே! எனது மகள் ஒரு சாதுவை மட்டுமே திருமணம் செய்துகொள்ள விரும்புகிறாள்.
அவளை மணக்கும் சாதுவிற்கு எனது இராஜ்ஜியத்தில் பாதியை அளிக்க நான் தயாராக உள்ளேன்.
மன்னரின் அறிவிப்பைக் கேட்ட பல சாதுக்கள் உடனடியாக எழுந்து வெளியேறினர். அவர்களுக்கு மன்னர் கூறியவற்றில் ஆர்வமில் லை. பிரச்சார வாய்ப்பிற்காகவே மன்னரைச் சந்திக்க வந்திருந்தனர்.
மீதமிருந்த சாதுக்களிடம்
கவனியுங்கள், நான் எனது இராஜ்ஜியத்தில் முக்கால் பாகத்தைத் தரவும் தயாராக உள்ளேன். தயவு-செய்து, எனது மகளை மணந்து கொள்ளுங்கள்.
நாங்கள் சாதுக்கள், சந்நியாசிகள் அல்ல என்றபோதிலும், எங்களுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது. உங்கள் மகள் எங்களுக்கு வேண்டாம். மன்னரை மதிப்பதற்காகவே இங்கு வந்தோம், செல்வதற்கு அனுமதி கொடுங்கள்.
பின்னர் மறைந்திருந்த திருடன் இதனைக் கேட்டு...
ஆஹா, அருமையான வாய்ப்பு. முக்கால் பாக இராஜ்ஜியம் உழைப்பு ஏதும் இல்லாமல்...



வரைபட உதவி: www.iskcondesiretree.com

நல்ல சாது சங்கம் கிடைத்தும் நாம் பக்குவமடைவதில் தாமதம் ஏற்படுவது ஏன்? என்னும் கேள்வி தற்போது எழலாம். இதோ ஸ்ரீல பிரபுபாதர் விடையளிக்கின்றார்.

காலை நேர நடைப்பயிற்சி,
மார்ச் 11, 1976, மாயாப்பூர்

**பஞ்ச திராவிடர்:** லவ எனப்படும் பதினொன்றில் ஒரு பங்கு விநாடி நேரம் தூய பக்தர்களுடன் சங்கம் வைத்துக் கொள்வதால் ஒருவர் அனைத்து பூரணத்துவத்தையும் அடைய முடியும் என சாஸ்திரங்கள் (சைதன்ய சரிதாம்ருதம், மத்ய லீலை 22.54) கூறுகின்றன. அஃது எப்படி?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஒருவன் கபடமின்றி நேர்மையுள்ளவனாக இருந்தால் அது சாத்தியம். காய்ந்த மரம் எளிதில் தீப்பற்றி எரியும், அஃது ஈரமாக இருந்தால் எரியாது. இதுவே மரத்தின் தன்மை. சில மரங்களுக்கு 300 வருடங்கள் ஆகும், வேறு சில மரங்களுக்கு

மூன்று நிமிடங்கள் ஆகும்; அதுபோலவே. பௌதிக களங்கம் என்ற ஈரம் உலர்ந்திருந்தால், ஆன்மீகத் தீ உடனடியாக சுடர்விடுகிறது.

**தமால் கிருஷ்ணர்:** அந்த உலர்த்தும் முறை என்ன?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ண பக்தனாவதற்காக பற்பல ஆண்டுகளாகச் செய்யப்படும் முயற்சியே அந்த உலர்த்தும் முறையாகும். பஹூனாம் ஜன்மனாம் அந்தே (பகவத் கீதை 7.19). பற்பல பிறவிகளில் பூரணமடைந்த பிறகே ஒருவர் பகவானிடம் சரணடைகிறார். அவ்வாறு சரணடைவதற்கு மூன்று நிமிடங்களும் ஆகலாம், அல்லது மூன்று கோடி வருடங்களும் ஆகலாம்.

**குரு கிருபா:** ஸ்ரீல பிரபுபாதரே, கிருஷ்ணரே எல்லாம் என்னும் அந்த ஞானம் கிருஷ்ணரின் கருணையால் மட்டுமே கிடைக்கும். அப்படித்தானே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ணரின் கருணை எப்போதும் உள்ளது. அதை ஏற்க நாம் தயாராக இல்லை.

**பஞ்ச திராவிடர்:** நாம் ஏற்பதற்குத் தயாராக இருந்தால், சாதுக்களிடமிருந்து கேட்பதற்கான அவசியம்கூட கிடையாதா? அவர்களைப் பார்த்தாலே தூய்மையடைந்துவிட முடியுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆமாம். நம்முடைய தகுதி, சாதுவினுடைய தகுதி--இரண்டுமே அவசியம். தீக்குச்சியும் ஒழுங்காக இருக்க வேண்டும், மரமும் சரியானதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நெருப்பு எளிதில் பற்றி எரியும். இரண்டில் ஏதாவது ஒன்று சரியில்லையெனில், நெருப்பு எரியாது. நீங்கள் ஈரப்பதத்துடன் இருந்தால்கூட, நெருப்பிற்கு அருகாமையில் சென்றால், உலர்ந்து விடுவீர்கள். உலர்ந்த பின்னர் நெருப்பு நன்றாகப் பற்றி எரியும். ஆனால் பிரச்சனை என்னவெனில், சற்று உலர்ந்த பின்னர், நாம் வேண்டுமென்றே மீண்டும் நீரை ஊற்றிக் கொள்கிறோம். அந்த முட்டாள்தனத்தால்தான் நமக்கு நேரமாகிறது. ஒருபக்கம் நெருப்பின் அருகில் நம்மை நாம் வைத்துக் கொண்டாலும், மறுபக்கம் நீரையும் ஊற்றிக் கொண்டிருந்தால், நெருப்பு எப்படி எரியும்? சட்டதிட்டங்களே உலர்த்தும் வழிமுறை, ஆனால் அவற்றைப் பின்பற்றாமல் மாயையின் வசப்படுவதால், திரும்ப நீரை ஊற்றுகிறோம். திரும்ப உலர்த்துகிறோம், இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. உலர்த்துவது, நனைப்பது, உலர்த்துவது, நனைப்பது. கிருஷ்ண பக்தியின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதே உலர்த்துவதற்கான சிறப்பான வழிமுறையாகும். பிரச்சனை என்னவெனில், உலர்த்திய பிறகு நாம் மீண்டும் அதனை நனைத்து விடுகிறோம்.

---

# பண்பாட்டைக் கைவிடும் பாரத மக்கள்



மேற்கத்திய நாட்டினரையும் அந்நிய நாட்டினரையும் பின்பற்றுவதால் நாம் நமது சொந்த பண்பாட்டைக் கைவிட்டு விட்டோம். இந்தியர்களின் சுபாவம் மேற்கத்திய நாட்டினரிடமிருந்து வேறுபட்டிருப்பதால், மேற்கத்திய பண்பாட்டையும் இந்தியர்களால் சரியாக பின்பற்ற முடிவதில்லை. முந்தைய பிறவிகளில் ஆன்மீகப் பண்பாட்டை விருத்தி செய்ய விரும்பியவர்களே இந்தியாவில் பிறக்கின்றனர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, இந்தியாவில் பிறப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஆனால், ஒருவன் பிறந்ததும், இந்நாட்டின் முட்டாள் தலைவர்களும், முட்டாள் தந்தையும், முட்டாள் ஆசிரியர்களும், "ஆன்மீகப் பண்பாடு பயனற்றது, ஆன்மீகத்தில் ஆர்வம் இருந்ததால்தான் நம்மை ஆங்கிலேயர்கள் அடிமைகளாக்கினர். எனவே, அவற்றையெல்லாம் துறந்துவிட்டு தொழிற்கல்வியில் முன்னேறுங்கள்," என்று கூறி அவனைக் கெடுத்து விடுகின்றனர். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. பாவப்பட்ட இளைய தலைமுறையினர் என்ன செய்ய முடியும்?

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், ஏப்ரல் 15, 1976ல் மும்பையில் அருளிய ஸ்ரீமத் பாகவத (7.12.4) உபன்யாஸத்தின் ஒரு பகுதி.

# ஸ்ரீ



புல்லாங்குழலை ஊதியபடி வனத்திற்குள் சென்று தன் நண்பர்களுடன் பசுக்களை மேய்க்கும் கிருஷ்ண பலராமரின் அழகைக் காண்பதே கண்களின் பூரணத்துவமாகும்.


—கோபியரில் ஒருவர் தனது தோழியிடம் கூறியது

(கிருஷ்ணா, புருஷோத்தமரான முழுமுதற் கடவுள்; அத்தியாயம் 21, குழலோசையால் கவரப்பட்ட கோபியர்கள்)

# எல்லோரையும் கவரும்
# ரீ கிருஷ்ண பலராமர்



# ஸ்ரீ கிருஷ்ண பிரசாதம்



**உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் மகா மருந்து**

வழங்கியவர்: திருமதி ரங்க பக்தி தேவி தாஸி

## உணவினால் வரும் பாதிப்புகள்

*ஆஹார ஷுத்தௌ ஸத்வ ஷுத்தி*

ஒருவனது ஆகாரம் சுத்தமானதாக இருந்தால் அவனது உள்ளமும் உடலும் தூய்மையாக இருக்கும் என்று வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே, உண்ணும் உணவு குறித்து நாம் எப்போதுமே கவனத்துடனும் கண்டிப்புடனும் இருத்தல் வேண்டும். உணவை சமைப்பவரின் அல்லது பரிமாறுபவரின், மனநிலையும் உணர்வுகளும் உணவைப் பாதிக்கும். தீய உணர்வுடையோரால் வழங்கப்படும் உணவை உண்பதால், உண்பவரின் மனநிலை பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, உணவு வழங்குபவரின் பாவகரமான கர்மாக்களிலும் (தீவினைகளிலும்) உண்பவர் பங்கெடுத்துக் கொள்ள நேரிடும்.

மஹாபாரதத்தில் இது குறித்த ஒரு சம்பவம் உள்ளது. மகாஜனங்களில் ஒருவரான பீஷ்மரிடம் திரௌபதி, துரியோதனனால் தான் அரசவையில் அவமானப்படுத்தப்பட்டபோது தன்னைக் காப்பாற்றத் தவறியது குறித்து வருத்தம் தெரிவித்தாள். அப்போது பீஷ்மர், துரியோதனன் இட்ட உணவை உண்டதால்தான் தனது மனநிலை பாதிக்கப்பட்டு அவனது பாவகரமான கர்மாக்களில் பங்கெடுத்துக் கொண்டதாகத் தெரிவித்தார். பீஷ்மருக்கே அந்த நிலை என்றால், நமது நிலை என்ன? பகவான் ஸ்ரீ சைதன்யர் கூறுகிறார், "ஜட விஷயங்களில் மிகுந்த பற்றுதல் கொண்டவனால் சமைக்கப்பட்ட உணவை ஒருவன் உண்டால், அவனது மனம் களங்கமடையும். மனம் களங்கமடைந்துவிட்டால் கிருஷ்ணரை ஒருவனால் முறையாக நினைக்க முடியாது. (ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம், அந்திய லீலை 6.278)

## சைவ உணவு போதுமா?

"நான் சைவ உணவு மட்டுமே உண்கின்றேன்," என்று கூறும் நம் நாட்டினரில் சிலர், அதனால் பெருமிதம் கொள்வதைப் பார்க்கின்றோம். ஆனால், அந்த சைவ உணவும் நமக்கு கர்மாவை வழங்கக் கூடியதாகும். தாவரங்களுக்கும் உயிர் உள்ளது, அவற்றை நாம் உண்ணும்போது நாம் நிச்சயமாக அதற்கான பாவத்தை அனுபவித்தாக வேண்டும். (தாவர உணவினால் ஏற்படும் பாவம், அசைவ உணவினால் ஏற்படும் பாவத்தைக் காட்டிலும் மிகவும் குறைவு என்றபோதிலும்) தாவர உணவுகளை நாம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு (விஷ்ணுவிற்கு) நைவேத்யம் செய்யும் போது மட்டுமே, பாவ விளைவுகளிலிருந்து நாம் முற்றிலுமாக விடுபடுகின்றோம். பகவத் கீதையிலும் (3.13) இதுவே வலியுறுத்தப்படுகிறது:

யக்ஞ-ஷிஷ்டாஷின: ஸந்தோ
முச்யந்தே ஸர்வ-கில்பிஷை:
புஞ்ஜதே தே த்வகம் பாபா
யே பசந்த் யாத்ம-காரணாத்

"யாகத்தில் அர்ப்பணிக்கப்பட்ட உணவை உண்பதால், பகவானின் பக்தர்கள் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். தங்களது சுய புலனின்பத்திற்காக உணவு தயாரிப்பவர்கள், பாவத்தையே உண்கிறார்கள்."

## நைவேத்யம் செய்வது எப்படி?

கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்வதற்கென்றே ஒரு தட்டும், சில கிண்ணங்களும், தண்ணீருக்கு ஒரு குவளையும் (டம்ளரும்) தனியாக இருக்க வேண்டும். தட்டில் சாதமும் கிண்ணங்களில் சாம்பார், ரசம், கூட்டு, பொரியல் முதலியவற்றையும், குவளையில் தூய நீரும் எடுத்துக் கொண்டு அவை ஒவ்வொன்றிலும் துளசி இலைகளை வைக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட தட்டானது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விக்ரஹம் அல்லது படத்திற்கு முன் ஒரு மேசையின் மீது வைத்து அதற்கு முன் அமர்ந்து கிருஷ்ணர் எங்ஙனம் உண்டு மகிழ்வார் என்பதை தியானித்துக் கொண்டு மணியை அடித்தவாறு கீழே உள்ள மந்திரங்கள் ஒவ்வொன்றையும் மூன்று முறை சொல்ல வேண்டும்.

(1)

நம ஓம் விஷ்ணு-பாதாய க்ருஷ்ண-
பிரேஷ்டாய பூ-தலே
ஸ்ரீமதே பக்திவேதாந்த-ஸ்வாமின் இதி
நாமினே
நமஸ் தே ஸாரஸ்வதே தேவே கௌர-
வாணி-பிரசாரிணே
நிர்விஷேஷ-ஷுன்யவாதி பாஷ்சாத்ய-
தேஷ-தாரிணே

(2)

நமோ மஹா-வதான்யாய க்ருஷ்ண-
ப்ரேம-ப்ரதாய தே
க்ருஷ்ணாய க்ருஷ்ண-சைதன்ய-
நாம்னே கௌர-த்விஷே நம:

(3)

நமோ ப்ரஹ்மண்ய-தேவாய கோ-
ப்ராஹ்மண-ஹிதாய ச
ஜகத்-திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய
நமோ நம:

நைவேத்யம் செய்யும் பக்தர், அவற்றை தனது குருவிற்கு அர்ப்பணம் செய்வதாக தியானிக்க வேண்டும், குருதேவர் அதனை குரு பரம்பரையின் மூலம் கிருஷ்ணருக்கு நிவேதனம் செய்வார். கிருஷ்ணருக்கு நேரடியாக எதையும் நைவேத்யம் செய்யும் தகுதி தனக்கு இல்லை என்று பக்தர் எண்ண வேண்டும்.

நைவேத்யமானது கிருஷ்ணருக்கு முன் சுமார் பதினைந்து நிமிடங்கள் வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர், உணவானது பிரசாதமாக மாறி விடுகின்றது; அதனை பரிமாறும் பாத்திரங்களிலுள்ள இதர உணவுடன் கலந்துவிடவும். இந்த நைவேத்திய முறை எளிமையானதாக இருக்கும்போதிலும், அன்புடனும் பக்தியுடனும் அர்ப்பணம் செய்யப்பட்டால், கிருஷ்ணர் அதனை நிச்சயம் ஏற்பார்.

## எத்தகைய உணவை கிருஷ்ணர் ஏற்பார்?

பக்தியுடனும் பிரியத்துடனும் அளிக்கப்படுபவை மட்டுமே கிருஷ்ணரால் ஏற்றுக்கொள்ளப்படும். எனவே, பக்தர்கள், நல்ல தரமான சிறந்த பழங்கள், காய்கறிகள், தானியங்கள், பால், மற்றும் பால் பொருட்களை கவனத்துடனும்



கவனிப்புடனும் கிருஷ்ணருடைய உவகைக்கு என வாங்கி தயாரிக்க வேண்டும். மாமிசம், மீன், முட்டை, பூண்டு, வெங்காயம், காளான், வினிகர், மசூர் பருப்பு போன்றவை கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்யத்தகாதவை.

கிருஷ்ணர் எங்கனம் உண்டு மகிழ்வார் என்பதையே சமையல் செய்கையில் நினைக்க வேண்டும். சமையல் செய்பவர்கள் தங்களது சொந்த இன்பத்தையோ, குடும்பத்தினரின் மகிழ்ச்சியையோ எண்ணுதல் கூடாது. நைவேத்யம் செய்யப்படுபவை மிகவும் சுத்தமாகத் தயாரிக்கப்படுகின்றனவா என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கிருஷ்ணருக்கு நைவேத்யம் செய்வதற்கு முன், சமைப்பவர் உட்பட எவரும் அதை ருசி பார்க்கவோ உண்ணவோ கூடாது.

## பிரசாதம் என்றால் கருணை

பிரசாதம் என்றால் “கருணை” என்று பொருள். பிரசாதத்தினை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, அது பகவானின் கருணை என்பதால், நாம் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைகிறோம். எனவே, பிரசாதமானது கவனத்துடனும் பக்தியுடனும் அளிக்கப்பட வேண்டும், ஏற்கப்பட வேண்டும்.

(இக்கட்டுரையானது தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமியினால் அருளப்பட்ட “பக்தி யோகம்—ஓர் அறிமுகம்” என்னும் புத்தகத்திலுள்ள குறிப்புகளைத் தழுவி எழுதப்பட்டதாகும்.)



*திருமதி. ரங்க பக்தி தேவி தாஸி அவர்கள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கிருஷ்ண பக்தியை தமது குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து சென்னையில் பயிற்சி செய்து வருகிறார்.*

# பிரலம்பாசுர வதம்



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய, கிருஷ்ணா—புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என்னும் புத்தகத்தின் பதினெட்டாம் அத்தியாயம்

நாசகாரத் தீயை அணைத்த பிறகு, கிருஷ்ணர் தனது நண்பர்கள், உறவினர்கள், பசுக்கள், கன்றுகள், மற்றும் எருதுகளின் புடைசூழ, நண்பர்கள் புகழ் பாட, எப்போதும் பசுக்களால் நிறைந்திருந்த விருந்தாவனத்தை மீண்டும் அடைந்தார். கிருஷ்ணரும் பலராமரும் விருந்தாவனத்தின் கோப கோபியர் களின் மத்தியில் மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்தபோது பருவங்கள் மாறி கோடைக் காலம் வந்தது. கோடைக் காலத்தில் வெப்பம் மிகுதியாக இருப்பதால் இந்திய மக்கள் அப்பருவத்தை அவ்வளவாக விரும்புவதில்லை. ஆனால் விருந்தாவனத்தில் எல்லோரும் கோடையை வரவேற்றார்கள்; ஏனெனில், அங்கு கோடைக் காலமும் வசந்த காலத்தைப் போல் இன்பகரமாக இருந்தது. பிரம்ம தேவரையும் சிவபெருமானையும் தம் ஆளுகைக்குள் வைத்திருந்த கிருஷ்ண பலராமர் அங்கு வசித்ததால் அது சாத்தியமாயிற்று. விருந்தாவனத்தில், எப்போதும் நீர் வீழ்ந்து கொண்டிருக்கும் அருவிகள் பல உண்டு. அவற்றின் இனிய ஒலி, வண்டுகளின் ரீங்காரத்தைத் தோற்கடிக்கும். எங்கும் நீர் வழிந்தோடுவதால் வனம் எப்போதும் பசுமையாகவும் அழகாகவும் விளங்கும்.

விருந்தாவனவாசிகள் ஒருபோதும் சூரியனின் தகிக்கும் வெப்பத்தினால் அவதிப்பட்டதில்லை. விருந்தாவனத்தின் ஏரிகளைச் சுற்றி பசுமையான புல் வகைகளும், கஹ்லார, கஞ்ஜ, உத்பல போன்ற பல வகையான தாமரை மலர்களும் மலர்ந்திருப்பதால், அங்கு வீசும் காற்றில் அத்தாமரை மலர்களின் நறுமணம் எப்போதும் பரவியிருக்கும். யமுனை நதியின் அலைகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும், நீர் வீழ்ச்சிகளிலிருந்தும் எழும் சாரல் நீர் விருந்தாவனவாசிகளின் உடலை குளுமைப்படுத்தியது.



விருந்தாவனம் அத்தகு நேர்த்தியான இடம். அங்கு மலர்கள் எப்போதும் பூத்துக் குலுங்கும், பல வகையான அழகு மிக்க மான்களும் அங்கு உண்டு. பறவைகள் கீச்சொலியை கிளப்ப, மயில்கள் அகவி நடனமாட, வண்டுகள் ரீங்காரமிட, அங்குள்ள குயில்கள் ஐந்து வகையான ராகங்களில் கீதம் இசைத்தன.

இன்பத்தின் இருப்பிடமான கிருஷ்ணர் குழலூதியபடி, தனது அண்ணன் பலராமர், கோபாலச் சிறுவர்கள், மற்றும் பசுக்களுடன் விருந்தாவனக் காட்டின் அழகிய சூழ்நிலையை அனுபவிக்க அதனுள் நுழைந்தார். அங்கிருந்த மரங்களின் மலர்கள் மயிலிறகுகளை ஒத்திருந்தன, அவற்றில் புதிதாக வளர்ந்திருந்த இலைகளுக்கு மத்தியில் அவர்கள் நடந்து சென்றனர். அவர்கள் அத்தகு மலர்களால் மாலையிடப்பட்டு குங்குமப் பொடியினால் அலங்கரிக்கப் பட்டிருந்தனர். சில நேரங்களில் அவர்கள் ஆடிப் பாடினர், வேறு சில நேரங்களில் மல்யுத்தத்தில் ஈடுபட்டனர். கிருஷ்ணர் நடனமாடியபோது, சில சிறுவர்கள் பாடினர், சிலர் குழலிசைத்தனர், சிலர் எருமைக் கொம்பை ஊதினர், வேறு சிலர், "தம்பி, நீ மிகவும் நன்றாக நடனமாடுகிறாய்," என்று புகழ்ந்து கரவோசை எழுப்பினர். உண்மையில் இச்சிறுவர்களெல்லாம் கிருஷ்ணருக்கு உதவுவதற்காக வானுலகிலிருந்து வந்திருந்த தேவர்களாவர். ஆயர்குலச் சிறுவர்களின் தோற்றத் திலிருந்த அந்த தேவர்கள், ஒரு கலைஞன் மற்றொருவரைப் புகழ்ந்து உற்சாகப்படுத்துவதைப் போல, நடனமாடும்படி கிருஷ்ணரை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள். அதுவரை கிருஷ்ணருக்கும் பலராமருக்கும் முடியெ டுக்கும் சடங்கு நடைபெறவில்லை என்பதால், அவர்களின் தலைமுடி காக்கையின் இறகுகளைப் போல அடர்ந்து காணப்பட்டது. அவர்கள் தங்களது நண்பர்களுடன் எப்போதும் கண்ணாமூச்சி விளையாடுவர், குதித்துக் கொண்டிருப்பர், அல்லது மல்யுத்தம் செய்வர். சில வேளைகளில், நண்பர்கள் ஆடிப்பாடிய போது, "நண்பர்களே, உங்களின் நடனமும் பாட்டும் மிக நேர்த்தியாக உள்ளன," என்று கூறி கிருஷ்ணர் அவர்களைப் பாராட்டுவார். வில்வம், ஆமலக்கி போன்ற பழங்களைக் கொண்டு அவர்கள் பந்தாடுவர். கண்களைக் கட்டி, ஒருவரையொருவர் தொட்டும், சவால் விடுத்தும் அவர்கள் விளையாடினர். சில வேளைகளில் அவர்கள் காட்டு மான்களைப் போலவும் பறவைகளைப் போலவும் நடித்து, தவளைகளைப் போல் குரல் கொடுத்து கேலி செய்தும் மகிழ்ந்தனர். மரங்களில் ஊஞ்சலாடி அனுபவித்தனர். சில வேளைகளில், அரசன் மற்றும் குடிமக்களாகத் தம்மைக் கற்பனை செய்து சபை நடத்தினார்கள். இவ்வாறாக, நதிகளும் ஏரிகளும் ஓடைகளும் நேர்த்தியான மரங்களும் சிறந்த பழங்களும் நிறைந்திருந்த விருந்தாவனத்தின் இதமான சூழ்நிலை யில் பலராமரும் கிருஷ்ணரும் தங்களது



நண்பர்களுடன் பல வகையான விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

ஒருநாள், அவர்கள் இவ்வாறு தமது தெய்வீக லீலைகளில் லயித்திருந்தபோது, பலராமரையும் கிருஷ்ணரையும் கடத்திச் செல்லும் நோக்கத்துடன், பிரலம்பாசுரன் என்ற பெயருடைய மாபெரும் அரக்கன் அவர்களிடையே புகுந்தான். கிருஷ்ணர் ஓர் ஆயர்குலச் சிறுவனாக விளையாடிக் கொண்டிருந்தாரென்றாலும், முழுமுதற் கடவுளாகிய அவர், கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் என அனைத்தையும் உணர்ந்தவர். எனவே, பிரலம்பாசுரன் அவர்களிடையே புகுந்தவுடன் அவனை எப்படிக் கொல்வது என்று கிருஷ்ணர் சிந்திக்கத் தொடங்கியபோதிலும், வெளிப் படையாக அவனை ஒரு நண்பனைப் போல் வரவேற்று, "அன்பான நண்பனே, எங்களுடைய விளையாட்டில் கலந்து கொள்ள நீயும் வந்திருப்பது நல்லதாயிற்று," என்று கூறினார். அதன் பின்னர், எல்லா நண்பர்களையும் அழைத்த கிருஷ்ணர், "இப்போது நாம் ஜோடி ஜோடியாக விளையாடலாம்; ஒருவருக்கொருவர் சவால் விடலாம்" என்று கட்டளையிட்டார். அதன்படி, எல்லாச் சிறுவர்களும் ஒன்று கூடி, சிலர் கிருஷ்ணரின் பக்கமும் சிலர் பலராமரின் பக்கமும் சேர்ந்து கொண்டனர். ஜோடி ஜோடியாக மல்யுத்தம் செய்ய வேண்டும்; வென்றவர்களைத் தோற்றவர்கள் குதிரையைப் போன்று முதுகில் சுமக்க வேண்டுமென்பது நிபந்தனை. விளையாடத் தொடங்கிய அவர்கள், பசுக்களையும் மேய்த்தபடி, பாண்டீரவனம் எனும் காட்டின் வழியே சென்றனர்.

விருஷபன் மற்றும் ஸ்ரீதாமாவுடன் கூடிய பலராமரின் குழு வெற்றி பெற்றது. அவர்களை கிருஷ்ணரின் குழுவினர் முதுகில் சுமந்தபடி பாண்டீர வனத்தைக் கடக்க வேண்டியதாயிற்று. தோல்வியடைந்த புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கிருஷ்ணர் ஸ்ரீதாமாவை முதுகில் சுமக்க வேண்டிய தாயிற்று. பத்ரசேனர் விருஷபனைச் சுமந்தார். அங்கு ஆயர்குலச் சிறுவனின் தோற்றத்தில் வந்திருந்த பிரலம்பாசுரனும் அவர்களைப் போல நடித்து பலராமரை முதுகில் சுமந்தான். அசுரர்களுள் மிகப்பெரியவனான பிரலம்பாசுரன், அங்கிருந்த ஆயர்குலச் சிறுவர்களுள் கிருஷ்ணரே மிகுந்த பலசாலி என்பதை யூகித்திருந்தான்.

கிருஷ்ணரின் அருகில் இருக்க விரும்பாத பிரலம்பாசுரன் பலராமரை வெகு தூரம் தூக்கிச் சென்றான். சந்தேகமின்றி அந்த அசுரன் பலத்திலும் சக்தியிலும் மிகுந்தவன். ஆனால் அவன் ஒரு மலைக்குச் சமமான பலராமரை தூக்கிச் சென்றதால், சுமையை உணரத் தொடங்கினான். அதனால் அவன் தனது உண்மை உருவை எடுத்தான். அவன் தனது உண்மை உருவத்தில் தோன்றிய போது, தங்கக் கிரீடத்துடனும் குண்டலங்களுடனும் அலங்கரிக்கப்பட்டு, பிரகாசமான நிலவைத் தாங்கிச் செல்லும் மேகத்தைப் போன்று தோற்றமளித்தான். அசுரனின் உடல் மேக மண்டலம் வரை விரிவடைவதையும், கொழுந்துவிட்டு எரியும் அனல்போன்ற கண்களையும், பளிச்சிடும் கூரிய பற்களையும் பலராமர் கவனித்தார். அசுரனின் தோற்றத்தைக் கண்ட பலராமர் முதலில் ஆச்சரியப்பட்டார். "என்னை சுமந்து வந்தவன் திடீரென்று எப்படி முற்றிலும் மாறினான்?" என்று அவர் வியந்தார். ஆனால், தன்னை ஓர் அசுரன் நண்பர் களிடமிருந்து தூரமாக எடுத்துச் சென்று கொல்ல நினைக்கிறான் என்பதை அவர் தெளிந்த மனதுடன் விரைவாகப் புரிந்து கொண்டார். இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் மலையைத் தாக்குவதைப் போல், உடனடியாக அசுரனின் தலையில் பலராமர் தன் பலமான



முஷ்டியால் ஓங்கித் தாக்கினார். பலராமரின் முஷ்டியினால் தாக்கப்பட்ட அசுரன், தலை நசுங்கிய பாம்பைப் போல, கீழே விழுந்து இறந்தான். அவன் வாயிலிருந்து இரத்தம் கொட்டியது. அசுரன் விழுந்தபோது எழும்பிய பேரொலி, இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டு வீழ்ந்த மலைபோல் கேட்டது. பின்னர், அனைத்துச் சிறுவர்களும் அந்த இடத்திற்கு விரைந்தார்கள். கோரமான காட்சியைக் கண்டதும், சிறுவர்கள் பலராமரை "சபாஷ், சபாஷ்" என்று கூறிப் பாராட்டினார்கள். பலராமர் மரணத்திலிருந்து திரும்பினார் என்றெண்ணிய அவர்கள் பெரும் பாசத்துடன் அவரைத் தழுவிக் கொண்டார்கள். அவருக்கு ஆசிகளையும் பாராட்டுதல்களையும் வழங்கினார்கள். ஸ்வர்க லோகத்திலுள்ள தேவர்கள் மிகவும் திருப்தியுற்று பலராமரின் தெய்வீகத் திருமேனியின் மீது மலர் மாரி பொழிந்தனர். பிரலம்பாசுரனைக் கொன்றதற்காக அவர்களும் ஆசி வழங்கிப் பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

# சேலம் மாநகரில் ஸ்ரீ ஜெகந்நாதரின் ரதயாத்திரை

ஒரிசா மாநிலத்தின் புகழ்பெற்ற ஸ்ரீ ஜெகந்நாதர் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ரதயாத்திரை (தேர்த் திருவிழா) இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பிரபலமான ஒன்றாகும். கடந்த ஜூலை மாதம் 13ஆம் தேதியன்று ஸ்ரீ ஜகன்னாதர், பலதேவர் மற்றும் சுபத்ரையின் பிரம்மாண்டமான ரதங்கள் இலட்சக்கணக்கான பக்தர்களின் திருக்கரங்களால் இழுக்கப்பட்டு, புண்ணிய க்ஷேத்ரமான பூரியின் நீளமான ரத வீதியில் பவனி வந்தன.



ஸ்ரீ ஜெகந்நாதர் ரதயாத்திரைத் திருவிழாவின் பலனை உலகிலுள்ளோர் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக, இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள், உலகிலுள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் இந்த ரதயாத்திரைத் திருவிழாவைத் துவக்கி வைத்தார். அதன்படி, இந்தியாவிலுள்ள பல்வேறு இஸ்கான் கோவில்களிலும் வருடந்தோறும் ரதயாத்திரை நடைபெற்று வருகின்றது. பூரியில் ரதயாத்திரை நடைபெறும் அதே நாளில், கொல்கத்தா, புவனேஸ்வர், பரோடா, சூரத், ஐதராபாத், விசாகப்பட்டினம் உட்பட பல்வேறு நகரங்களில் இஸ்கான் சார்பில் ரதயாத்திரை நடத்தப்பட்டு வருகிறது. அதே நாளில் தமிழகத்தில் ரதயாத்திரை நடைபெறுவதில்லையே என்னும் ஏக்கத்தைப் போக்கும்விதமாக, இஸ்கான் சேலம் கிளையைச் சார்ந்த பக்தர்கள், சேலம் மாநகரில் ஒரு மாபெரும் ரதயாத்திரை நிகழ்ச்சியை நடத்திச் சிறப்பித்துள்ளனர்.

மாங்கனிக்குப் பெயர் பெற்ற மாநகரின் மாந்தர்கள் மகிழ்ச்சியுடன் கூடிவர, ரதயாத்திரை நிகழ்ச்சி மிகவும் மங்களகரமான முறையில் சிறப்பாக நடைபெற்றது. மதியம் 3:30 மணிக்கு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அருகில் தொடங்கிய ரதயாத்திரை, அக்ரஹாரம், ராஜ கணபதி கோவில், பட்டைக் கோவில், மார்க்கெட் தெரு வழியாக AVR கல்யாண மண்டபத்தை அடைந்தது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் பாடி ஆடியதை ரசித்தபடி ஸ்ரீ ஜெகந்நாதர், தனது சகோதர சகோதரியுடன் கம்பீரமாக வலம் வந்ததைக் கண்ட ஆயிரக்கணக்கான சேலம் நகரவாசிகள் பிரமித்துப் போயினர். ரதயாத்திரையின் வழிநெடுக பிரசாத விநியோகமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ரதமானது திருமண மண்டபத்தை வந்தடைந்தவுடன் அங்கு பஜனை, கீர்த்தனம், ஆரத்தி, சொற்பொழிவு, மற்றும் பிரசாத விநியோகமும் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பான இந்த ரதயாத்திரை நிகழ்ச்சியினை இனி வருடந்தோறும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக கோவிலின் தலைவரான திரு. கோகுல் சந்திர தாஸ் அவர்கள் தெரிவித்தார்.






**டாக்டர் பென்போர்ட்:** இறைவனைப் பற்றிய மேற்கத்திய கொள்கைகளில் "தீவினையின் பிரச்சனை (the problem of evil) என்று கூறப்படுவது குறித்து தாங்கள் அறிந்திருக்கலாம். தீவினை ஏன் நிகழ்கிறது?

**ஸ்ரீல பிரபுபாதர்:** வெளிச்சமில்லாததால் இருட்டு ஏற்படுவதைப் போல, நல்வினை இல்லாததால் தீவினை நிகழ்கிறது. நீங்கள் எப்பொழுதும் உங்களை வெளிச்சத்திலேயே வைத்துக் கொண்டால், இருட்டு என்ற கேள்விக்கே இடமில்லை. கடவுள் நன்மையே உருவானவர். எனவே, நீங்கள் உங்களை எப்பொழுதும் கடவுளின் உணர்வில் வைத்துக் கொண்டால், தீவினை என்பதே கிடையாது.

**பென்போர்ட்:** ஆனால், இவ்வுலகம் தீய மனிதர்களுடன் உருவாக்கப்பட்டிருப்பது ஏன்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** காவல்துறை ஏன் உருவாக்கப்பட்டது? அதற்கு அவசியம் ஏற்பட்டதால்தானே. அதே போல சில உயிர்வாழிகள் இந்த ஜடவுலகை அனுபவிக்க விரும்பியதால், கடவுள் இதனைப் படைத்துள்ளார். அவர், குறும்புத்தனமான குழந்தை விளையாடுவதற்குத் தனியாக ஓர் அறையை வழங்கும் தந்தையைப் போன்றவர். இல்லையேல், அக்குழந்தை அவருக்கு இடையூறு செய்யக்கூடும்.

**பென்போர்ட்:** அப்படியெனில், இவ்வுலகம் ஒரு சிறையைப் போன்றதா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். இது சிறைதான். அதனால்தான் இங்கு துன்பங்கள் உள்ளன. சிறைச்சாலையில் நீங்கள் வசதியை எதிர்பார்க்கக் கூடாது. சிறையில் துன்பம் இருந்தால் மட்டுமே குற்றவாளிகளைத் திருத்த இயலும். இவ்வுலகம், பகவத் கீதையில் *து:காலயம் அஷாஷ்வதம்* என கூறப்பட்டுள்ளது. *து:காலயம்* என்றால், "துன்பமே உருவான இடம்" என்றும், *அஷாஷ்வதம்* என்றால், "நிலையற்றது" என்றும் பொருள்படும். இந்த நிலையை அனுசரித்துக் கொண்டு, "பரவாயில்லை, நான் துன்பப்பட்டாலும் அதனை நான் கண்டு கொள்வதில்லை—நான் இங்கேயே இருப்பேன்," என்று நீங்கள் சொல்ல முடியாது. உங்களால் இங்கேயே தொடர்ந்து இருக்க முடியாது. நீங்கள் உதைத்து வெளியேற்றப்படுவீர்கள். தற்போது நீங்கள் உங்களை ஓர் அமெரிக்கராகவும், பெரிய விஞ்ஞானி யாகவும், மகிழ்ச்சியோடு வாழ் பவராகவும், நிறைய சம்பாதிப் பவராகவும் நினைக்கலாம். அஃது உண்மைதான், ஆனால் நீங்கள் இந்த பதவியில் நிரந்தரமாக இருக்க முடியாது. நீங்கள் துரத்தப்படும் நாள் விரைவில் வரும். அதன் பின்னர், நீங்கள் அமெரிக்கராக, விஞ்ஞானியாகவே இருக்கப் போகிறீர்களா, அல்லது நாயாக, பூனையாக, அல்லது தேவராக ஆகப் போகிறீர்களா என்பது உங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் தெரிந்துகொள்ளாமல் உள்ளீர்கள்.

**பென்போர்ட்:** நான் மரணத்தோடு முடிந்துவிடுவேன் என்று நினைக்கின் றேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை, அத்தகு எண்ணமும் ஒருவித அறியாமையே. பகவத் கீதையில் (2.13) கிருஷ்ணர் விளக்குகிறார்: *தேஹினோ (அ)ஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா/ ததா தேஹாந்தர-ப்ராப்தி:*, முதலில் நீங்கள் சிறுவனின் உடலில் இருந்தீர்கள், தற்போது இளைஞனின் உடலில் உள்ளீர்கள், வருங்காலத்தில் முதியவனின் உடலை அடைவீர்கள். அதன் பின்னர்...

**பென்போர்ட்:** வயோதிகத்தைக் கடந்த பின்னர், நான் மறைந்துவிடுவேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை, இல்லவே இல்லை. *ததா தேஹாந்தர-பிராப்தி:*, இறப்பிற்குப் பின்னர் நீங்கள் இன்னொரு உடலில் புகுவீர்கள். எனவே, "நான் அழிந்துவிடுவேன்" என்று உங்களால் சொல்ல முடியாது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம் என்பது உண்மையே. ஆனால் சட்டத்தின் விதிகள் மாறுபட்டதாகும். உங்களுக்கு சட்டம் தெரிந்திருக்கலாம், தெரியாமலும்

இருக்கலாம். அதை சட்டம் பொருட் படுத்தாது, அது தன் வேலையைச் செய்யும். உதாரணமாக, நெருப்பைத் தொட்டால் சுடாது என நீங்கள் நினைக்கலாம். ஆனால் அஃது உண்மையல்ல, நெருப்பு நிச்சயம் சுடும். அதுபோலவே இறப்பிற்குப் பின்னர் எல்லாம் முடிந்துவிட்டது என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் அஃது உண்மையல்ல.

**பென்போர்ட்:** உலகத்தைப் பகுத்தறிவின் மூலம் புரிந்துகொள்ள முயற்சி செய்யும் என்னைப் போன்ற சிலர், அதற்கான வழியை அறியாமல் இருப்பது ஏன்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் விஷயங்களை பகுத்தறிவுடன் அறிய முயற்சி செய்கின்றீர்கள், ஆனால் அதற்கு உரிய ஆசிரியரை நீங்கள் அணுகுவதில்லை.

**பென்போர்ட்:** ஆனால் உலகை ஆராய்ந்து அறிவதன் மூலம் அறிவைப் பெற முடியும் என நான் நினைக்கின்றேன். இத்தகு அறிவினை சரிபார்க்கவும் வழி உள்ளது. ஒரு கூற்றினை வடிவமைத்து, அதனை வைத்து ஆராய்ச்சிகள் செய்து, நமது கருத்துகள் சரியானவையா என்பதைப் பரிசீலிக்க முடியும். அதன் பின்னர், அக்கருத்துகளை நடைமுறை வாழ்வில் ஈடுபடுத்த முடியுமா என்று பார்க்கலாம்.



**ஸ்ரீல பிரபுபாதர்:** இது மற்றொரு வகையான அறியாமை; ஏனெனில், நீங்களே குறைபாடுள்ளவர்—ஆனால் அதை நீங்கள் அறிவதில்லை.

**பென்போர்ட்:** நான் குறைபாடுள்ளவன் என்பது எனக்குத் தெரியும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், இந்த உலகத்தை அப்படியும் இப்படியும் புரிந்துகொள்ள முயற்சிப்பதால் என்ன பலன்? நீங்கள் குறைபாடுள்ளவர் என்பதால் முடிவும் குறைபாடுள்ளதாகவே இருக்கும்.

**பென்போர்ட்:** ஆம். அஃது உண்மையே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** பின்னர் ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள்?

**பென்போர்ட்:** அறிவைப் பெறுவதற்கு வேறெந்த வழியும் புலப்படவில்லையே?

**ஸ்ரீல பிரபுபாதர்:** சாதாரண ஜட அறிவைப் பெற வேண்டுமென்றாலும், நீங்கள் பல்கலைக்கழகம் சென்று பேராசிரியரை அணுக வேண்டும். அவ்வாறே ஆன்மீக அறிவை, குறைபாடுகளற்ற அறிவை, நீங்கள் பெற விரும்பினால், குறையற்ற ஓர் ஆசிரியரை நீங்கள் அணுக வேண்டும். அப்போதுதான் குறையற்ற, பக்குவமான அறிவை நீங்கள் பெற முடியும்.

**பென்போர்ட்:** ஆசிரியர் (குரு) பக்குவ மானவர் என்பதை எப்படி அறிய முடியும்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அஃது ஒன்றும் கடினமல்ல. பக்குவமான குரு என்பவர் மற்றொரு பக்குவமான குருவிடமிருந்து கற்றவராக இருக்க வேண்டும்.

**பென்போர்ட்:** ஆனால், அது பிரச்சனையைத் தீர்க்காது. பிரச்சனை அடுத்த இடத்திற்கு நகர்ந்துள்ளது, அவ்வளவுதான்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. கிருஷ்ணர் என்னும் ஒரு குறையற்ற ஆசிரியர் உள்ளார், அவர் எல்லாவித



ஆசிரியர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவர். வேத பண்டிதர்களால் கற்றுத் தரப்படும் வேதப் பண்பாடு இன்னும் இந்தியாவில் இருப்பதைக் காண்கிறோம். அந்த வேத ஆசிரியர்கள் அனைவரும் கிருஷ்ணரை உன்னத ஆசிரியராக ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் கிருஷ்ணரிடமிருந்து பாடத்தை ஏற்று, அதனைப் பிறருக்குக் கற்பிக்கின்றனர்.

**பென்போர்ட்:** அப்படியெனில், கிருஷ்ண ரை பக்குவமான ஆசிரியராக ஏற்றுக் கொள்ளும் யாரை நான் சந்தித்தாலும், அவரை நான் பக்குவமான ஆசிரியராக ஏற்றுக் கொள்ளலாமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், யாரொருவர் கிருஷ்ணரின் போதனைகளை போதிக் கின்றாரோ, அவரே பக்குவமான குரு.

**பென்போர்ட்:** அதன்படி பார்த்தால், இங்கிருக்கும் எல்லா பக்தர்களும் பக்குவமான குருவா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். ஏனெனில், அவர்கள் கிருஷ்ணரின் போதனைகளை போதிக்கின்றனர். அவ்வளவுதான். அவர்கள் பக்குவமானவர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், கிருஷ்ணரால் போதிக்கப்பட்டவை என்பதால், அவர்களால் பேசப்படுபவை அனைத்தும் பக்குவமானவை.

**பென்போர்ட்:** பின்னர், நீங்கள் பக்குவமானவர் இல்லையா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை, நான் பக்குவமானவன் அல்ல. எங்களில் யாருமே "நான் பக்குவமானவன்" என்று பறைசாற்றுவதில்லை. எங்களிடமும் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. ஆனால், நாங்கள் கிருஷ்ணரது போதனை களைத் தவிர வேறு எதையும் பேசாத காரணத்தினால், நாங்கள் போதிப்பவை அனைத்தும் பக்குவமானவையே. நாங்கள், 1000 டாலர் மதிப்புள்ள பண அஞ்சலை (மணியார்டரை) உங்களிடம் பட்டுவாடா செய்யும் தபால்காரரைப் போன்றவர்கள். தபால்காரர் பணக்காரர் அல்ல. ஆனால் தபால் பணத்தை அவர் அப்படியே உள்ளது உள்ளபடி வழங்கினால், அதனால் நீங்கள் பலன் பெறுகின்றீர்கள். அவர் பணக்காரர் அல்ல, ஆனால் அவருடைய குறையற்ற நடத்தை—நேர்மையான நடத்தை—பக்குவமானதாகும். அதுபோலவே, நாங்களும் பக்குவமானவர்கள் அல்ல; நாங்கள் குறைபாடுகளால் நிறைந்த வர்கள். ஆனால் நாங்கள் கிருஷ்ணரது போதனைகளை மீறிச் செல்வதில்லை. அதுவே எங்களின் வழிமுறை. அதனால்தான் எங்களது போதனைகள் பக்குவமானவை.

(தமிழாக்கம்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்)




## நேரமில்லை, நேரமில்லை

Back to Godhead பத்திரிகையைப் (ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தைப்) படியுங்கள் என்று சில கனவான்களை அணுகிய போது, அவர்களது பதில், ''எங்களுக்கு நேரமில்லை'' என்பதுதான். உயிரை (ஆத்மாவை) உடலுடன் வைத்துக் கொள்ள உழைக்க வேண்டியுள்ளதால், அவர்கள், ''நேரமில்லை'' என்கின்றனர். ஆனால், ஆத்மா என்றால் என்ன என்று கேட்டால் அவர்களிடம் பதில் இல்லை.

Dr. மேகநாத சகா என்ற விஞ்ஞானி, அவசர அவசரமாக திட்டக்குழுக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருந்தார். ஆனால் செல்லும் வழியிலேயே சாலை விபத்தில் இறந்து விட்டார். ''தற்போது எனக்கு நேரமில்லை, சற்று பொறுத்திருங்கள்'' என்று மரணத்திடம் அவரால் சொல்ல முடியவில்லை.

காங்கிரஸ் தலைவரான Dr. அன்சாரி, புகைவண்டியில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது மரணமடைந்தார். அவரும் அவரது குடும்பத்தினரும் மருத்துவர்களாக இருந்த போதிலும், எவ்வித மருத்துவ உதவியுமின்றி அவர் இறக்க நேரிட்டது.

எனவேதான், மரணம் ஒருபோதும் களைப்பற்றது என பாகவதம் வர்ணிக்கின்றது. எனக்கு இறப்பில்லை என ஒவ்வொருவரும் எண்ணும்போதிலும், மரணம் அனைவருக்காகவும் காத்திருக்கிறது. மரணத்திற்குப் பின்னரும் வாழ்க்கை உண்டு. இறப்பிற்குப் பின்னர் எங்கு செல்கிறோம் என்பதை அயராது அரும்பாடுபட்டு உழைக்கும் மனிதன் கண்டறிய வேண்டும். நமது நீண்ட பயணத்தில், இந்த வாழ்க்கை என்பது ஒரு சிறு புள்ளியைப் போன்றதே, அறிவுள்ள மனிதன் அந்த சிறு புள்ளிக்காக அரும்பாடுபட்டு உழைப்பதில்லை. உடலைப் பாதுகாக்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆனால், இந்த உடல் என்பது வெறும் மேலாடை என்றும், உள்ளிருக்கும் ஆத்மாவே உண்மையான நபர் என்றும் பகவத் கீதையிலிருந்து ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும். எனவே, மேலாடையை மட்டும் பாதுகாத்துவிட்டு, உள்ளிருக்கும் நபரைப் பாதுகாக்கவில்லையெனில், அது முட்டாள்தனமும் கால விரயமுமே ஆகும்.

1956இல் ஸ்ரீல பிரபுபாதர் Back to Godhead பத்திரிகையில் எழுதியதன் சிறு பகுதி.

**விரைவில் ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் சந்தாதாரராக மாறுங்கள்! ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தைப் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுங்கள்!**



தமிழில் உள்ள
ஒரே முழுப் பதிப்பு
அனைத்து இஸ்கான்
கோவில்களிலும் கிடைக்கும்.
மேலும் விவரங்களுக்கு, 91596 39306
சர்வ வேதாந்த சாரம் எனப்படும்
ஸ்ரீமத் பாகவதம்
பக்தி, யோகம், தியானம் போன்றவற்றின் முழுமையான கலைக்களஞ்சியம்
288 வண்ணப்படங்கள்
12 காண்டங்கள், 18 புத்தகங்கள்
16,000 பக்கங்களுக்கு மேல்
18,000 ஸ்லோகங்களும் அடங்கியது
அனைத்து வேத இலக்கியங்களின் தலைசிறந்த மணிமகுடமாகத் திகழும் ஸ்ரீமத் பாகவத மஹா புராணம். வேதங்கள் என்னும் கற்பக மரத்தின் கனிந்த பழமாகும். இது சாக்ஷாத் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இலக்கிய அவதாரம். வேதாந்த சூத்திரத்திற்கு வேத வியாசரே அளித்த இயற்கையான விளக்கவுரை.
பிரபஞ்சத்தின் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைப் படைப்பு, கோள்களின் நிலை, படைப்பின் மூல தத்துவம், இறை விஞ்ஞானம், முக்தி, இறுதி இலக்கு, மற்றும் பல விஷயங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கக்கூடிய களங்கமற்ற புராணம்.
புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட மிக உயர்ந்த அனுபவமான ஸ்ரீமத் பாகவதம், பரமஹம்ஸ நிலையில் உள்ளவர்களும் சுவைக்கக்கூடிய அமிர்தமாகும்.
ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் அதன் மூல சமஸ்கிருத வடிவம், தமிழ் வடிவம், வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம், மொழிபெயர்ப்பு மற்றும் தெளிவான பொருளுரைகளை வழங்கும் செம்மையான நூல்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் நான்கு

*நைமிஷே (அ)னிமிஷ-க்ஷேத்ரே*
*ருஷய: ஷௌனகாதய:*
*ஸத்ரம் ஸ்வர்காய லோகாய*
*ஸஹஸ்ர-ஸமம் ஆஸத*

#### மொழிபெயர்ப்பு

ஒருமுறை, நைமிஷாரண்ய வனத்திலுள்ள புனிதமான ஓரிடத்தில், சௌனக ரிஷியைத் தலைமையாகக் கொண்ட மகாரிஷிகள், பகவானையும் அவரது பக்தர்களையும் திருப்திப்படுத்துவதற்காக, ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும் மாபெரும் யாகத்தை நடத்துவதற்காகக் கூடினர்.

#### பொருளுரை

முந்தைய மூன்று ஸ்லோகங்களில் ஸ்ரீமத் பாகவதத்தின் முன்னுரை பேசப்பட்டது. இப்போது இந்த மிகச்சிறந்த நூலின் முக்கியமான விஷயம் வழங்கப்படுகிறது. ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமியால் முதலில் பேசப்பட்ட ஸ்ரீமத் பாகவதம், இரண்டாவது முறையாக நைமிஷாரண்யத்தில் மறுபடியும் பேசப்பட்டது. *வாயவீய* தந்திரத்தில், இப்பிரபஞ்சத்தின் பொறியாளரான பிரம்மா, பிரபஞ்சத்தையே உள்ளடக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்கரத்தைப் பற்றி மனதிற்குள் நினைத்தார் என்று கூறப்பட்டுள்ளது. மிகப்பெரிய அச்சக்கரத்தின் அச்சு நைமிஷாரண்யம் என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதைப் போலவே, நைமிஷாரண்ய வனத்தைப் பற்றிய மற்றுமொரு குறிப்பு வராஹ புராணத்தில் காணப்படுகிறது. இவ்விடத்தில் வேள்வி செய்வதால், அசுர எண்ணம் கொண்டவர்களின் பலம் குறைக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அத்தகைய வேள்விகளைச் செய்வதற்கு நைமிஷாரண்யத்தை சிறந்த இடமாக பிராமணர்கள் எண்ணுகின்றனர்.

பகவான் விஷ்ணுவின் பக்தர்கள், எல்லாவிதமான யாகங்களையும் அவரது ஆனந்தத்திற்காக அர்ப்பணிக்கின்றனர். பக்தர்கள் எப்பொழுதும் பகவானின் தொண்டில் பற்றுதல் கொண்டவர்கள், வீழ்ந்த ஆத்மாக்களோ பௌதிக வாழ்வின் இன்பத்தில் பற்றுதல் கொண்டுள்ளனர். பகவான் விஷ்ணுவின் இன்பத்தைத் தவிர வேறு காரணத்திற்காக எந்தவொரு செயலை இப்பௌதிக உலகில் செய்தாலும், அச்செயல் அதனை செய்பவரை மேலும் அதிகமான பந்தத்துக்கு ஆளாக்கி விடும் என்று பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. எனவே, எல்லாச் செயல்களுமே பகவானையும் அவரது பக்தர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவே செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இஃது அனைவருக்கும் அமைதியையும் முன்னேற்றத்தையும் தரும்.

பொதுமக்களுக்கு நன்மை செய்வதை மகாரிஷிகள் எப்போதும் விரும்புகின்றனர். இதனால், மாபெரும் தொடர் யாகச் சடங்குகளை நிறைவேற்றும் திட்டத்துடன், சௌனகரை தலைமையாகக் கொண்ட ரிஷிகளும் மற்றவர்களும் நைமிஷாரண்யம் என்னும் இப்புண்ணிய ஸ்தலத்தில் கூடியுள்ளனர். மறதியுள்ள மனிதர்கள், அமைதிக்கும் செழுமைக்கும் உரிய சரியான வழியை அறிவதில்லை. இருப்பினும், அதனை நன்கு அறிந்துள்ள ரிஷிகள், உலகில் அமைதியை ஏற்படுத்தும் செயல்களை எல்லாருடைய நன்மைக்காகச் செய்வதில் எப்பொழுதும் ஆவலோடு காத்திருக்கின்றனர். அவர்கள், எல்லா ஜீவராசிகளுக்கும் உண்மையான நண்பர்களாக இருந்து, மாபெரும் சொந்த அசௌகரியங்களுக்கு மத்தியிலும் அனைத்து மக்களின் நன்மைக்காக, பகவானின் தொண்டில் எப்பொழுதும் ஈடுபட்டுள்ளனர். பகவான் விஷ்ணு ஒரு மாபெரும் மரத்தைப் போன்றவர்; தேவர்கள், மனிதர்கள், சித்தர்கள், சாரணர்கள், வித்யாதரர்கள், மற்றும் பிற ஜீவராசிகள் உட்பட அனைவரும், அந்த மரத்தின் கிளைகள், சுள்ளிகள், மற்றும் இலைகளைப் போன்றவர்களாவர். மரத்தின் வேருக்கு நீரூற்றுவதால், மரத்தின் எல்லாப் பகுதிகளும் தானாகவே சக்தியைப் பெறுகின்றன. துண்டிக்கப்பட்ட கிளைகளும் இலைகளும் மட்டுமே ஊட்டத்தைப் பெறுவதில்லை. துண்டிக்கப்பட்ட கிளைகளுக்கும் இலைகளுக்கும் எவ்வளவுதான் நீரூற்றினாலும், அவை விரைவிலேயே காய்ந்து விடுகின்றன. அதைப் போலவே, மனித சமூகம் பரம புருஷ பகவானிடமிருந்து பிரிக்கப்படும்போது, அச்சமுதாயம் துண்டிக்கப்பட்ட கிளைகளையும் இலைகளையும் போல ஆகி, நீரூற்ற இயலாமல் போய் விடுகின்றது; அதற்கு

முயற்சி செய்பவன் அவனது சக்தியையும் வளங்களையும் வெறுமனே வீணடித்துக் கொண்டுள்ளான்.

நவீன பௌதிக சமுதாயம் பரம புருஷருடனான தங்களது உறவிலிருந்து பிரிந்த நிலையில் உள்ளது. மேலும், அதன் நாஸ்திகத் தலைவர்களால் உருவாக்கப்படும் எல்லாத் திட்டங்களும் ஒவ்வோர் அடியிலும் உடைத்தெறியப்படுகின்றன. இருப்பினும் அவர்கள் இதில் விழித்துக் கொள்வதே இல்லை.

இந்த யுகத்தில், பகவானின் புனித நாமங்களைக் கூட்டமாகச் சேர்ந்து பாடுவதே விழித்துக் கொள்வதற்கான முறையாகும். இதற்கான வழிகளும் உபாயங்களும் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவால் மிகவும் விஞ்ஞானப்பூர்வமாக வழங்கப்பட்டுள்ளன; மேலும், அறிவுள்ள நபர்கள் அவரது போதனைகளைப் பயன்படுத்தி, உண்மையான அமைதியையும் செழுமையையும் ஏற்படுத்தக் கூடும். இதே நோக்கத்திற்காகத் தான் ஸ்ரீமத் பாகவதமும் வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் ஸ்லோகங்களில் இது மிகவும் தெளிவாக விளக்கப்படும்.

## ஸ்லோகம் 5

த ஏகதா து முனய:
ப்ராதர் ஹுத-ஹுதாக்னய:
ஸத்-க்ருதம் ஸூதம் ஆஸீனம்
பப்ரச்சுர் இதம் ஆதராத்


## மொழிபெயர்ப்பு

ஒரு நாள், ஹோமம் செய்து தங்களது ஆராதனையை முடித்துக்கொண்டபின், ஸ்ரீல சூத கோஸ்வாமியை மதிப்பிற்குரிய ஆசனத்தில் அமரச் செய்த மகாரிஷிகள், மிகுந்த மரியாதையுடன் பின்வரும் விஷயங்களைப் பற்றிய கேள்விகளை அவரிடம் கேட்டனர்.

## பொருளுரை

ஆன்மீகத் தொண்டாற்றுவதற்கு காலை நேரம் மிகவும் உகந்ததாகும். அந்த சிறந்த முனிவர்கள், வ்யாஸாஸன, அதாவது ஸ்ரீ வியாசதேவருக்குரிய ஆசனம் என்றழைக்கப்படும் உயர் மதிப்பிற்குரிய ஆசனத்தை பாகவதத்தை பேசுபவருக்கு வழங்கி கௌரவித்தனர். ஸ்ரீ வியாசதேவரே மக்கள் எல்லாருக்கும் மூல ஆன்மீக குரு ஆவார். மற்றெல்லா குருக்களும் அவருடைய பிரதிநிதிகளாகக் கருதப்படுகின்றனர். யாரொருவர் ஸ்ரீ வியாசதேவரின் கருத்தை அப்படியே வழங்குகின்றாரோ, அவர் வியாசரின் பிரதிநிதியாவார். ஸ்ரீ வியாசதேவர் பாகவதத்தின் கருத்துக்களை ஸ்ரீல சுகதேவ கோஸ்வாமிக்கு உபதேசித்தார். அதன் பிறகு, ஸ்ரீ சூத கோஸ்வாமி அதை சுகதேவரிடமிருந்து கேட்டறிந்தார். குரு சீடப் பரம்பரையில் வரும் ஸ்ரீ வியாசதேவரின் உண்மையான பிரதிநிதிகள் எல்லாரும் கோஸ்வாமிகள் என்று அறியப்படுகின்றனர். இந்த கோஸ்வாமிகள் தங்களுடைய அனைத்துப் புலன்களையும் கட்டுப்படுத்துவது மட்டுமின்றி, முந்தைய ஆச்சாரியர்களால் வகுக்கப்பட்ட வழியைப் பின்பற்றுகின்றனர். பாகவதத்தின் மீதான கோஸ்வாமிகளின் சொற்பொழிவு மனம்போன போக்கில் இருப்பதில்லை. மாறாக, ஆன்மீகக் கருத்துகளைச் சிதைத்து விடாமல் வழங்கிய தங்களது பூர்வீக ஆச்சாரியர்களைப் பின்பற்றி, அவர்கள் தங்களின் சேவைகளை மிகவும் கவனத்துடன் நிறைவேற்றுகின்றனர்.

பாகவதத்தைக் கேட்பவர்கள், தெளிவான விளக்கத்தை அறிந்துகொள்ள அதனை உபதேசிப்பவரிடம் கேள்விகள் கேட்கக்கூடும், ஆனால் அவை சவால் விடும் நோக்கத்தில் இருக்கக் கூடாது. உபதேசிப்பவருக்கும் உபதேசிக்கப்படும் விஷயத்திற்கும் மிகுந்த மரியாதையளித்து, கேள்விகளைக் கேட்க வேண்டும். பகவத் கீதையிலும் இந்த முறைதான் பரிந்துரைக் கப்பட்டுள்ளது. சரியான மூலத்திடமிருந்து பணிவுடன் கேட்பதன் மூலம், ஒருவன் தெய்வீக விஷயத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே, இந்த மாமுனிவர்கள் உபதேசமளிக்கும் சூத கோஸ்வாமியை மிகுந்த மரியாதையுடன் அணுகினர்.



(அடுத்த இதழில் தொடரும்)

# நாகர்கோவிலில் பூமி தான யாகம்

கடந்த ஜூன் மாதம் 27ம் தேதியன்று இஸ்கான் நாகர்கோவில் சார்பில் பூமி தான யாகம் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு அமையவிருக்கும் புதிய கோவிலுக்கு நிலம் வாங்குவதற்காக நன்கொடையளித்த நற்பெருமக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு, பூமி தான யாகம் தகுந்த மந்திரங்களுடன் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தமிழகத்திற்கான இஸ்கான் ஜி.பி.சி.





உறுப்பினரான தவத்திரு. பானு ஸ்வாமி அவர்கள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நன்கொடையாளர்கள் அனைவருக்கும் பூமி தான சான்றிதழை வழங்கினார்.

## கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

### ஆகஸ்ட்

03, செவ்வாய், ஸ்ரீ லோகநாத கோஸ்வாமி மறைவு நாள்

06, வெள்ளி, கமிக ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04–10:15

13, வெள்ளி, ஸ்ரீ ரகுநந்தன தாகூர் மறைவு நாள்
ஸ்ரீ வம்ஸிதாஸ பாபாஜி மறைவு நாள்

20, வெள்ளி, பவித்ரோபன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:05–10:14
ராதா கோவிந்த ஊஞ்சல் உற்சவம்

21, சனி, ஸ்ரீ ரூப கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீ கௌரிதாஸ பண்டிதர் மறைவு நாள்

23, திங்கள், முதல் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

24, செவ்வாய், ஊஞ்சல் உற்சவத்தின் நிறைவு நாள்
பலராமரின் அவதாரத் திருநாள் (மதியம் வரை விரதம்)
சாதுர்மாதத்தின் இரண்டாம் மாதம் ஆரம்பம் (தயிர் வகைகளிலிருந்து ஒரு மாத விரதம்)

### செப்டம்பர்

02, வியாழன், ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி
(நள்ளிரவு வரை விரதம்)

03, வெள்ளி, நந்தோத்ஸவம்
ஸ்ரீல பிரபுபாதர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

5, ஞாயிறு, அன்னத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:05–10:10

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

### சாதுர்மாஸ்யம்

மழைக் காலத்தைச் சார்ந்த நான்கு மாதங்கள் சாதுர்மாஸ்யம் எனப்படும். சாதுர்மாஸ்ய விரதத்தை அனுசரிக்க வேண்டியது மக்கள் அனைவருக்கும் அவசியமாகும். இந்த நான்கு மாதங்களின் போது மேற்கொள்ளப்படும் விரதத்தின் முக்கிய நோக்கம், புலனின்பத்திற்கான அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதே. முதல் மாதத்தில் கீரை வகைகளையும், இரண்டாவது மாதத்தில் தயிரையும், மூன்றாவது மாதத்தில் பாலையும், நான்காவது மாதத்தில் உளுத்தம் பருப்பையும் தவிர்த்தல் வேண்டும். மொத்தமாகப் பார்த்தால், சாதுர்மாஸ்யம் எனப்படும் இந்த நான்கு மாத கால அளவில், புலனின்பத்திற்கான உணவுகளை கைவிடுவதற்கு பயிற்சி செய்ய வேண்டும்.

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2626508/9. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 041. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@pamho.net www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: 99442 05875. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.


ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி
செப்டம்பர் 2, வியாழக்கிழமை
பஜனை
கீர்த்தனம்
அபிஷேகம்
சொற்பொழிவு
கலை நிகழ்ச்சிகள்
பிரசாதம்
மேலும் விபரங்களுக்கு, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் கோவிலைத் தொடர்பு கொள்ளவும்.
அனைவரும் வருக, ஸ்ரீ கிருஷ்ணரின் அருளைப் பெறுக.




தங்கமயில்

தங்கம் • வைரம் • வெள்ளி • பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

**இராஜபாளையம்**
613, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**இராமநாதபுரம்**
282, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 255553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 276553

விரைவில் தூத்துக்குடி